பக்கங்கள்-16 மாசி,21.2015 விலை-30.00




நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

தினப்புயலில்
சிறப்பு விளம்பரம்
விசேட விலைக்
கழிவுடன்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க...
0778195947,
0776473692

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -154

## 1956-2009 வரை சிங்கள இனத்தால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட தமிழினப் படுகொலைகள்




## போராட்டங்களுக்கு மாணவர்களைப் பயன்படுத்துவது நிறுத்தப்படல் வேண்டும்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அரசியல் கைதிகளா?




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1956–2009வரை சிங்கள இனத்தால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட தமிழினப் படுகொலைகள்

01. இங்கினியாகல படுகொலை - கரும்பு தொழிற்சாலையில் 05.05.1956 அன்று 150பேர் சிங்கள கும்பலால் கொலை. கோவிலில் அர்ச்சகர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார். குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டனர்.

02. 1956 இனப்படுகொலை - பல்வேறு இடங்களில் சிங்கள கும்பலால் 01.05.1958அன்று 300க்கு மேற்பட்டவர்கள் கொலை.

03. தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை - மாநாட்டு அரங்கில் 10.01.1974 அன்று 09 பேர் சிங்கள காவல்துறையினரால் படுகொலை.

04. 1977 இனப்படுகொலை - 1977 இல் பல்வேறு இடங்களில் 1500க்கு மேற்பட்டோர் சிங்கள ராணுவம்/சிங்கள ஊர்காவல் படையினரால் கொலை.

05. பெரிய புல்லுமலை இனப்படுகொலை - இராணுவ முகாமில் 20.05.1980 அன்று 25 பேர் சிங்கள காவல்துறை/சிங்கள கும்பலால் கொலை.

06. 1981 இனப்படுகொலை - பல்வேறு இடங்களில் சிங்கள ராணுவத்தால் கொலை - எண்ணிக்கை தெரியவில்லை.

07. யாழ் நூலக எரிப்பு - 01.06.1981 அன்று சிங்கள ராணுவம்/சிங்கள கும்பலால் எரிப்பு. இலங்கையில் தமிழ் கலாச்சாரம் அழிக்கப்படுவதற்கு ஒரு உதாரணம்.

08. 1983 இனப்படுகொலை - பல்வேறு இடங்களில் 23.07.1983 அன்று 3000க்கு மேற்பட்டோரை சிங்கள கைதிகள். சிங்கள கும்பல். வாக்காளர்கள் பட்டியலை கையில் வைத்துக்கொண்டு வீடுவீடாகச்சென்று கொலைசெய்தனர்.

09. வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை - சிறைச்சாலையில் 25.07.1983அன்று 35பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

10. திருநெல்வேலி படுகொலை - பல்வேறு இடங்களில் 24.25.07.1983அன்று 51பேர் சிங்கள வான்படையால் கொலை.

11. சாம்பல்தோட்டம் படுகொலை - காட்டில் 1984இல் 55பேர் சிங்கள கும்பலால் கொலை.

12. சுன்னாகம் காவல்நிலைய படுகொலை - காவல் நிலையத்தில் 08.01.1984 அன்று 19பேர் சிங்கள கும்பலால் கொலை.

13. சுன்னாகம் சந்தை படுகொலை - சந்தை/ரோடு/பேருந்து நிறுத்தத்தில் 28.03.1984 அன்று 9பேர் சிங்கள காவல் துறையால் கொலை.

14. மதவாச்சி-ரம்பாவ படுகொலை - பேருந்தில் 09.1984அன்று 15பேர் சிங்கள ராணுவம்/சிங்கள ஊர்காவல் படையினரால் கொலை.

15. திக்கம் படுகொலை - பல்வேறு இடங்களில் 16.09.1984அன்று 16பேர் சிங்கள காவல்துறை/சிங்கள கும்பலால் கொலை.

16. ஒதியமலை படுகொலை - கிராமத்தில் 01.12.1984அன்று 32 பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

17. குமுழமுனை படுகொலை - ராணுவ முகாமில் 02.12.1984அன்று 6பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

18. செட்டிகுளம் படுகொலை - ராணுவ முகாமில் 02.12.1984 அன்று 52 பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

19. மன்னார் படுகொலை - ராணுவ முகாமில் 04.12.1984அன்று 200க்கு மேற்பட்டவர்கள் சிங்கள ராணுவத்தால் கொலை.

20. கொக்கிளை கொக்குதொடுவாய் படுகொலை - 15.12.1984 அன்று 131பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

21. முள்ளியவளை படுகொலை - கிராமத்தில் 16.01.1985 அன்று 17பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

22. வட்டக்கண்டல் படுகொலை - பள்ளிக்கூடம்/உழவு நிலத்தில் 30.01.1985அன்று 52பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

23. புதுக்குடியிருப்பு- இயன் கோவிலடி படுகொலை - 21.04.1985அன்று 30பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

24. வல்வை 85 படுகொலை - பல்வேறு இடங்களில் 10.05.1985அன்று 70பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

25. திருகோணமலை படுகொலை - 1985 பல்வேறு இடங்களில் 03.05.1985 அன்று 50பேர் சிங்கள கும்பல்/சிங்கள ராணுவத்தால் கொலை.

23.05.1985அன்று 8பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.
24.05.1985அன்று 9பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.
27.05.1985அன்று 7பேர் சிங்கள ஊர் காவல்படையால் கொலை.
03.06.1985அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

26. குமுதினி படகு படுகொலை - நடுக்கடலில் 15.05.1985 அன்று 36 பேர் சிங்கள கடற்படையால் கொலை. இன்றும் குமுதினி அம்மக்களின் பாதுகாப்பற்ற நிலையை குறித்துக்கொண்டுள்ளது.

27. கிளிவெட்டி படுகொலை - கிராமத்தில் 01.01.1985அன்று 10பேர் சிங்கள கும்பல்/சிங்கள ராணுவம் / சிங்கள ஊர்காவல்படையினரால் பெண்கள் பாலியல் வல்லுறவிற்குப்பின் நிர்வாணமாக விட்டு கொல்லப்பட்டனர்.

பேருந்தில் 02.06.1985அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

பல்வேறு இடங்களில் 03.06.1985அன்று 53பேர் சிங்கள ராணுவம்/சிங்கள கும்பலால் கொலை.

பல்வேறு இடங்களில் 14.06.1985அன்று 150பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

28. திரியாய் படுகொலை - உள்நாட்டில் குடிபெயர்ந்தோர் வாழிடத்தில் 08.08.1985 அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. பேருந்தில் 14.08.1985அன்று 6பேர் கொலை.

29. சாம்பல்தீவு படுகொலை - கிராமத்தில் 09.08.1985அன்று 383பேர் சிங்கள முப்படைகளால் கொலை.

30. வயலூர் படுகொலை - காட்டில் 24.08.1985அன்று 50பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. ஒருவர் வாயில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

31. நிலாவெளி படுகொலை - நிலாவெளி அகதிகள் முகாமில் 16.09.1985 அன்று 30க்குமேல் சிங்கள ராணுவம்/சிங்கள ஊர்காவல் படையினரால் கொலை.

32. பிரமந்தனாறு படுகொலை - பல்வேறு இடங்களில் 02.10.1985அன்று 11பேர் சிங்கள ராணுவத்தால். சிலர் தலைகீழாக தொங்கவிடப்பட்டு மூக்கில் நீரை ஊற்றிக் கொல்லப்பட்டனர்.

33. கந்தளாய் படுகொலை - பல்வேறு இடங்களில் 09.11.1985 அன்று 6பேர் சிங்கள ராணுவத்தால் இரு பெண்கள் கொல்லப்படுவதற்கு முன் பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கப்பட்டது பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.

34. முதூர் கடற்கரைசேனை படுகொலை - பல்வேறு இடங்களில் 8.9.10.11.1985அன்று 30பேர் சிங்கள முப்படைகளால் கொலை.

35. வங்காலை தேவாலய படுகொலை - தேவாலயத்தில் 06.01.1986அன்று 9பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

36. கிளிநொச்சி தொடருந்து நிலைய படுகொலை - தொடருந்து நிலையம் 25.01.1986அன்று 12பேர் சிங்கள ராணுவத்தால் மறைந்து நின்று மக்கள் மீது தாக்கப்பட்டனர்.

37. உடும்பன்குளம் படுகொலை - உழவு நிலம் 19.02.1986அன்று 130பேரின் இறந்த உடலின் மீது ராணுவத்தினர் வைக்கோலை தூவி தீ வைத்தனர்.

38. ஈட்டி முறிஞ்சான் படுகொலை - பல்வேறு இடங்களில் 19&20.03.1986அன்று 20பேர் சிங்கள வான்படை/சிங்கள ராணுவம் /சிங்கள கைதிகளால் கொலை.

39. பெரிய புல்லுமலை படுகொலை - வீட்டில் 08.05.1986அன்று 18பேரை சிங்கள ராணுவத்தினர் பூட்ஸ் காலால் ஏறி சென்றதால் மூன்று மாத குழந்தை உட்பட அனேக குழந்தைகள் கொல்லப்பட்டனர். பல்வேறு இடங்களில் 10.11.1986அன்று 24பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

40. அனந்தபுரம் ஏவுகணை தாக்குதல் - வீட்டில் 04.06.1986அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

41. கந்தளாய் படுகொலை - பேருந்தில் 04.05.06.1986அன்று 50க்கு மேல் சிங்கள வான்படை/சிங்கள ஊர்காவல் படையினரால் கொலை. எரிந்துபோன பேருந்தின் சாம்பலிலிருந்து 10 பேரின் உடல்கள் எடுக்கப்பட்டன.

42. மண்டைதீவு கடல் படுகொலை - கடலில் 10.06.1986அன்று 33பேர் சிங்கள கடற்படையால் சில மீனவர்களின் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டன. மேலும் சிலரின் வயிற்றுப்பகுதி கிழிக்கப்பட்டது.

43. செருவில் படுகொலை - அகதிகளுக்கு உணவு அனுப்பும் வேலையின்போது 12.06.1986அன்று 21பேர் சிங்கள ஊர்ப்படையால் கொலை.

44. தம்பலகாமம் படுகொலை - பல்வேறு இடங்களில் 12.11.1985அன்று 9பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. சிலர் கடைகளுக்குள் தீ வைத்து கொளுத்தப்பட்டனர்.

26.11.1985அன்று 8பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.
25.05.1986அன்று 6பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.
30.05.1986அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.
20.06.1986அன்று 34பேர் சிங்கள ராணுவம் /சிங்கள வான்படையால் கொலை.

45. பரந்தன் விவசாயிகள் படுகொலை - பல்வேறு இடங்களில் 28.06.1986 அன்று 7பேர் சிங்கள ராணுவம்/சிங்கள வான்படையால் கொல்லப்பட்ட உடல்கள் கழிவுநீர் வாய்க்கால்களில் வீசப்பட்டன.

46. பெருவெளி அகதிகள் முகாம் படுகொலை - அகதிகள் முகாம் 15.07.1986அன்று 48பேர் சிங்கள ராணுவம்/சிங்கள ஊர்காவல்படையால் கழிவுநீர் தொட்டிகளில் கொல்லப்பட்ட உடல்கள் திணிக்கப்பட்டிருந்தன. மேலும் திரவத்தை கொண்டு முகங்கள் அடையாளம் தெரியாமல் சிதைக்கப்பட்டிருந்தன.

47. தண்டுவான் பேருந்து படுகொலை - பேருந்தில் 17.07.1986அன்று 17பேர் சிங்கள ராணுவம்/சிங்கள வான்படையால் கொலை.

48. மூதூர் மணல்சேனை படுகொலை - பல்வேறு இடங்களில் 18.07.1986அன்று 14பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

49. அடம்பன் படுகொலை - பல்வேறு இடங்களில் 12.10.1986அன்று 20பேர் சிங்கள முப்படைகளால் கொலை.

50. பெரிய பண்டிவிரிச்சான் படுகொலை - உழவு நிலம் 15.10.1986 அன்று சிங்கள ராணுவம் 2பேரால் மார் பகங்களையும். பிறப்புறுப்பையும் வெட்டி சித்திரவதை செய்யப்பட்டு ஒரு பெண் கொல்லப்பட்டார்.

51. கொக்கட்டிச்சோலை படுகொலை - இறால் பண்ணையில் 28.01.1987அன்று 133பேர் சிங்கள சிறப்புப்படை/சிங்கள ராணுவத்தினரால் 14 முதல் 40 வயதானவர்கள் கடத்தி கொல்லப்பட்டனர்.

52. பட்டித்திடல் படுகொலை வீட்டில் இறைவழிப்பாட்டின் போது 26.04.1987அன்று 17பேர் சிங்கள ராணுவத்தால் ஒரு பெண் குழந்தை உணவருந்தும்போது தலையில் குண்டு காயம்பட்டு இறந்துபோனாள்.

53. தோணிதட்டமடு படுகொலை - கிராமத்தில்27.05.1987அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும்போது படுகொலை செய்யப்பட்டனர்.

54 ஆலவாய் கோவில் படுகொலை - கோவிலில் 29.05.1987அன்று 40பேர் சிங்கள ராணுவத்தால் இராணுவத்தின் ஆணையின் படி கோவிலில் தஞ்சமடைந்த மக்கள் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன.

55. மூளாய் மருத்துவமனை படுகொலை - மருத்துவமனை 05.11.1987அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

56. கிழக்கு பல்கலைக்கழகப் படுகொலை - தஞ்சமடைந்த இடத்தில் 23.24.05.1990அன்று 226பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

57. சம்மாந்துறை படுகொலை - பல்வேறு இடங்களில் 10.06.1990அன்று 37பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

58. வீரமுனை படுகொலை - பல்வேறு இடங்களில் 20.06.1990-15.08.1990அன்று 233பேர் சிங்கள ராணுவத்தால் படுகொலை.

59. சித்தாண்டி படுகொலை - ராணுவ முகாம் 20.27.07.1990அன்று 137பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

60. பரந்தன் சந்தை படுகொலை - கிராமத்தில் 24.07.1990அன்று 15பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

61. பொத்துவில் படுகொலை - காவல் நிலையம் 30.07.1990அன்று 125பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

62. திராய்கேணி படுகொலை - கிராமத்தில் 06.08.1990அன்று 90க்கு மேற்பட்டோர் சிங்கள ராணுவம்/சிங்கள சிறப்புப் படையினரால் ஒரு பெண் பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கப்பட்டு பின் நெருப்பில் வீசப்பட்டார்.

தொடரும்...

இரணியன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கூட்டரசாங்கம் தமிழினத்திற்கான தீர்வுகளைப் பெற்றுத்தருமா?

இலங்கையைப் பொறுத்தவரை இதுவரையில் ஆட்சிசெய்த ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை. தமக்கான உரிமைகளை முன்னிறுத்தியே தமிழினம் போராடி வந்ததும் வருகின்றதும் வரலாறு. தமிழ் மக்களின் 30வருட காலப்போராட்டம் தற்போது நிறைவடைந்திருக்கின்றது. கடந்த ஆட்சியாளர் மஹிந்த அவர்களால் திட்டமிட்டு சர்வதேச நாடுகளின் உதவியுடன் விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு பாரிய இனவழிப்புடன் நிறைவடைந்தது. இதனால் தமிழ் மக்களின் வாழ்வு சீர்குலைக்கப்பட்டிருந்தவேளையில், கடந்த 2015ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அவர்கள் தனது ஆட்சிக்காலம் 02வருடங்கள் இருக்கின்ற நிலையிலும் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த முனைந்தார். நாட்டின் சட்டங்களை மாற்றியமைத்து தான் மூன்றாவது முறையாகவும் ஆட்சிபுரியும் நோக்கில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார்.

இந்நிலையில் நாட்டில் மஹிந்த அவர்களின் சர்வாதிகார மற்றும் குடும்ப ஆட்சிக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைந்தனர். கடந்த கால கசப்பான அனுபவங்களின் காரணமாக தமிழ் மக்களும் ஏதோவொரு புதிய மாற்றத்தினை எதிர்பார்த்தனர். அதன் பயனாக நாட்டின் எதிர்க்கட்சியுடன் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனாவினை முன்னிறுத்தியதுடன், வழமைபோலவே தமிழ் மக்கள் மத்தியில் போலியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டதுடன், மைத்திரியின் 100நாள் வேலைத்திட்டம் என்ற ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களின் தேர்தல் பிரச்சாரம் மக்கள் மத்தியில் சென்றடைந்தது. அதன் பயனாக வடகிழக்கு, மலையகம் உட்பட்ட தமிழ்பேசும் மக்களின் ஆதரவுடன் மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெற்றிபெற்று இந்நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவானார். இதன் பின்னர் வரலாற்றில் முதன்முறையாக நாட்டின் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் அதாவது மைத்திரி-ரணில் இருவரும் ஒன்றிணைந்து ஒரு கூட்டரசாங்கத்தினை உருவாக்கியதுடன், பாராளுமன்றில் அடுத்த நிலையில் பெரும்பான்மை வகிக்கக்கூடிய த.தே. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவி வழங்கப்பட்டதுடன், பிரதம நீதியரசர் உட்பட பாராளுமன்றின் குழுக்களின் தலைவர்ப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசியல் இராஜதந்திர நகர்வுகள் பல இருக்கின்றன. சர்வதேசத்திற்கு தாம் தமிழினத்துடன் நட்புறவினைக் கொண்டிருக்கின்றோம் என்பதை வெளிக்காட்டும் அரசின் செயற்பாடே இது எனலாம்.


இந்நிலையில் தமிழ் மக்களுடைய இனப்படுகொலை, காணாமற்போனோர், அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற பிரச்சினைகள் முடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. மீள்குடியேற்றம் என்ற போர்வையில் குறிப்பிட்டளவு மக்களே நிவாரணம் பெற்றுள்ளனர். பெருமளவு நிதி இராணுவத்தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. கூட்டரசாங்கத்தினை நம்பி த.தே.கூட்டமைப்பு தற்போது அகலக்கால் விரித்துள்ளது. பூரண சமாதானம் என்று கூறிக்கொள்ளும் அளவிற்கு அரசின் செயற்பாடுகள் அமையப்பெறவில்லை. அது மட்டுமல்லாது ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். சுதந்திரமாக அவர்கள் செயற்படமுடியாத நிலைதோன்றியுள்ளது. பொதுவாக சொல்லப்போனால் சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் வகையில் இவ்வரசு தன்னை மாற்றிக்கொண்டுள்ளதே தவிர, 30 வருடகாலமாக போராடிய தமிழினத்தின் மீது அக்கறைகொள்வது போல் தெரியவில்லை. பணத்திற்காக சோரம் போகிறவர்களை அவதானிக்கமுடிகிறது. இவ்வாறான நிலைமைகள் மாற்றப்படவேண்டும். மஹிந்த ராஜபக்சவின் அரசில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் கூட இப்புதிய அரசினால் செய்யப்படவில்லை. புதிய அரசில் 200கைதிகளைக்கூட விடுதலை செய்வதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. கூட்டரசுடனான உண்மைத்தன்மைகள் எந்தளவிற்கு இருக்கின்றது என்பதை த.தே.கூட்டமைப்பு பகிரங்கமாக வெளியிடவேண்டும். இல்லையேல் மீண்டுமொரு இனமுறுகலைத் தோற்றுவிக்கும் சூழ்நிலை தோற்றுவிக்கப்படும்.

**78** ரவை முடிந்த தன் துப்பாக்கியை அணைத்தபடி அடர்பற்றையொன்றினுள் மறைந்து கிடந்தார் யாழ்மொழி. அவருடைய விழுப்புண்ணிலிருந்து சொட்டுச்சொட்டாக வடிந்து கொண்டிருந்தது குருதி. கூடவே அவரைத் தூக்கி காயத்துக்குக் குருதித் தடுப்பைச் செய்து, பின்னே அனுப்பிவிட்டுத் திரும்ப நகர்ந்தனர். அப்போது சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியிருந்தது.

இந்தப்பாதிப்பு போரிடும் வீரரின் ஆற்றலைத் திடீரெனப்பாதிக்கும். ஆனால் இக்கருத்தைப் பொய்யாக்கும் வகையில் இத்தாவில் களத்தில் பன்னிரண்டு மணிநேரமாக, கூட நின்ற உறவுகளின் வித்துடல்கள் அருகிலேயே இருக்க, ஒவ்வொரு பகையாக குறிபார்த்துப் பார்த்து வீழ்த்தமுடிந்தது என்றால், அருகில் நின்ற போராளியின் குருதியில் நனைந்தபின்னும், அவரது காயத்தைப் பத்திரமாகக் கட்டிவிட்டு அவருக்கு ஆறுதல் சொல்லியபடியே, வந்த பகையின் கதையை வழியிலேயே முடிக்க முடிந்தது

வலிச்சக்கர என்ற நடவடிக்கை மூலம் பெரியதோர் சாதனையைப் படைத்துவிட முயன்ற சிங்களப்படை தோற்றதுடன், இத்தாவில் பகுதியினுள் நிற்கும் புலிகளை முற்றுமுழுதாகக் கொல்லமுடியாது போனதால், நிலத்தைக் கைப்பற்றுவதன் மூலம் அங்கிருந்து எம்மை அகற்றலாம் என்று எண்ணிக்கொண்ட படையினர் யாழ் நெடுஞ்சாலை வழியாக முன்னேற முயற்சித்தனர். இப்பெரும் தாக்குதலுக்கு முகம்கொடுக்க கேணல் துர்க்காவின் தலைமையிலான சோதியா படையணி தயாரானது. அப்பகுதியில் தர்ஷா

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



அங்குலம் அங்குலமாக இடங்களைக் கைப்பற்றிக்கொண்டே நீரேரிக் கரையைநோக்கி நகர்ந்துசெல்ல, உள்ளேயிருந்து கலைக்கப்பட்ட இராணுவம் தனது பகுதியை நோக்கி ஓட்டமெடுத்தது. ஆயுதங்களை எறிந்துவிட்டு தப்பினாற் போதும் என்ற எண்ணத்தில் ஓடிக் கொண்டிருந்தவர்களை முன்னேறிக் கொண்டு வந்த எமதணிவிடவில்லை. வந்தவர்களில் பாதிப்பேர் விழ, மீதிப்பேர் தப்பிப்பிழைத்தனர். அவர்களையும் எமது எறிகணைகள் கலைத்துக்கலைத்து வீழ்த்தின.

இந்த நிலையில் கண்டற்கரையின் இறுதிநிலையை அடைந்தபோது படைத்தரப்பின் எறிகணைகள் அப்பகுதியில் வந்துவீழத்தொடங்கின. காப்புகளற்ற அந்த இடத்தில் வீழ்ந்த எறிகணையால் கனரக ஆயுதப் போராளிகளான கப்டன் மனமதி, கப்டன் திவ்யா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த மேஜர் றோய் ஆகியோர் அந்த மண்ணிலே வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இந்த இழப்பின் பின்னர் மீளக் கைப்பற்றப்பட்ட நிலைகளில் அணிகளை விட்டவாறு நீரேரிக்கரையை அடைந்தார் தர்ஷா. அங்கே இவர்களது குரல்களைக் கேட்ட முல்லைநிலா மகிழ்வுடன் தனது RPGயை அணைத்தபடியே வெளியே வந்தார். இன்னும் சற்றுத்தள்ளி கண்டற்பற்றையொன்றுள்ளிருந்து காயத்துடன் வெளியே வந்தார் மதியழகி. தன்னுடன் நின்ற மதுஷா, மேனகா ஆகியோர் வீரச்சாவடைந்து விட்டதாகவும் வெடிபொருள் முடிந்தநிலையில் தான்மட்டும் அங்குவந்து சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். உடனேயே அவரைப் பின்னணிக்கு அனுப்பினோம். அடுத்து காயம், வீரச்சாவுத் தொகையை கணக்கெடுப்பதுடன் வித்துடல்களை அனுப்பவேண்டிய பணி காத்துக்கிடந்தது.

"எந்தப் போர்க்களத்திலும் காயமுற்ற, வீரச்சாவடைந்தவர்களை அருகில் வைத்துக்கொண்டு சண்டையிடுவது என்பது ஏனைய வீரர்களின் உளவுரனைப் பாதிக்கின்ற விடயம். உளவியல்ரீதியான

என்றால், அதற்கு எமது போராளிகளின் மிகப்பெரிய மனவுறுதிதான் காரணமாகும். அதுவே இந்தப்போர்க்களத்தின் நூறுவீத வெற்றியும்கூட" என்று கேணல் பால்ராஜ் குறிப்பிட்டார்.

அன்றைய பகல் இன்னும் நீண்டிருந்தால் இராணுவத்துக்குத் தக்கபாடம் கற்பித்திருக்கமுடியும்என்பதேஎல்லோரது ஆதங்கமாகவும் இருந்தது. மிகவும் புத்திசாதுரியமாகத் திட்டமிடப்பட்ட வலிச்சக்கர நடவடிக்கையை எதிர்கொண்டு அதனை வெற்றிகரமாக முறியடித்தவர்கள் என்ற வகையில் நாம் பெருமைகொள்ளவேண்டும். உண்மையில் இது ஒரு வித்தியாசமான தாக்குதல், வித்தியாசமான அனுபவம்.

"100மீ.வேகத்துடன் எமது தாக்குதல் ஆரம்பித்திருக்கின்றதென்றால், அதே100மீ.வேகம்தாக்குதல் முடியும்வரை இருந்தது" என்ற பால்ராஜ் அவர்களின் கூற்றினுள் அடங்கியிருக்கின்ற ஈகம், வீரம், வேகம், வேதனை என்பன அந்தக் களத்தினுள் நின்றவர்களுக்கு மட்டுமே புரியக்கூடியது. அன்றைய தாக்குதலில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட, மாலதி படையணியில் 19பேர் வெற்றிக்கு வலுச்சேர்த்து விழிமூடிப் போயிருந்தனர்.

இதற்கு முதல் நாள் 01ஆம் திகதி இயக்கச்சிப் பகுதியில் ஒரு சண்டை நடந்திருந்தது. இத்தாவில் பகுதியினுள் நுழைந்த அணிகள் தளமமைத்து நிற்க, கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஏனைய அணிகள் நகர்ந்து யாழ் நெடுஞ்சாலையை ஊடறுக்க முயன்றன. நேற்று நடைபெற்ற இத்தாக்குதலில் மாலதி படையணியின் இரு பிளாட்டுன்கள் பங்குகொண்டன. சரவணாவின் 82மி.மீ. எறிகணை செலுத்தியும் இதனுடன் இணைக்கப்பட்டது. அத்துடன் மேஜர் தர அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த போராளிகளும் கலந்துகொண்டனர். இத்தாக்குதலில் மேஜர் நிரஞ்சனி, மேஜர் அமுதா உட்பட 16 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வின் அணியிலிருந்து அனுப்பப்பட்ட சாம்பவியின் பிளாட்டுன் நின்றதால், தாக்குதலில் பங்குபற்றும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

இவ்வாறு ஒவ்வொருநாளும் ஏதோவொரு முனையில் தாக்குதல் நடந்தவண்ணமேயிருந்தது. அந்தக் களத்தினுள் நின்ற மூன்று பெரும் படையணிகளும் நெருப்பு நதியுள் நீந்திவிட்டுக் காத்திருந்தோம். அதன் பின்னரும் கூட இராணுவம் சில பகுதிகளால் முன்னேறுவதற்கு வேளை பார்த்துக்கொண்டிருந்தது. நாமோ வாய்ப்பை ஏற்படுத்தி, மெல்ல மெல்ல முன்னே நகர்ந்து நிலைகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டோம்.

தென்னந்தோப்புப் பகுதியில் எம் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்த இராணுவம் பதுங்கிச்சூட்டை அரங்கேற்றியது. எனினும் வேலி மறைவுகளைப் பயன்படுத்தித் தேவைகளை நிறைவேற்றினோம். தொடர்ந்து இராணுவம் முன்னேறுவதும், நாம் முறியடிப்பதும், இராணுவம் இழப்புடன் திரும்புவதும், பின்னர் தென்னந்தோப்புகளும், ஈச்சம் பற்றைகளும் எறிகணை மழையில் குளிப்பதுவும் வழமையாகிப்போனது. அதேபோல நாம் வெல்லவேண்டும் என்பதை உணர்த்துவதாக நாளாந்தம் ஒவ்வொரு வித்துடல் தொண்டைமானாறு நீரேரி தாண்டி அனுப்பப்பட்டுக்கொண்டுதானிருந்தது. அத்துடன் வேவு அணிகளின் பணி வேகம் பிடித்தது.

சிங்களத்தி என்று செல்லமாக நாம் அழைக்கின்ற அபிநயா வேவுப் பணியுடன் எமக்கு மொழிபெயர்ப்புப் பணியையும் செய்தார். அவரோடு போகின்றவர்களுக்கு இயல்பாக ஓர் புத்துணர்வு தொற்றிவிடும். இராணுவக் காவலரணுக்குப் பக்கத்து வேலிக்கரையில் பதுங்கியிருந்தாலும்கூட அவரைச் சுரண்டி, "இப்ப என்ன சொல்லுறான்" என தம்முள் கதைத்துக்கொண்டிருக்கும் இராணுவம் பற்றிக் கேட்டுக்கொண்டிருப்பர்.

இப்படித்தான் ஒருநாள் அபிநயாவுடன் இன்னுமிருவரும் முன்னேசென்று காய்ந்த வேலிக் கதிகாலுக்குப் பக்கத்தில் பதுங்கியிருந்தனர். கடும்இருட்டு. இராணுவத்தின் இருப்பிடம் எதுவெனச் சரியாகத் தெரியாத நிலையில் மூச்சுவிடும் சத்தத்தையே கட்டுப்படுத்திவிட்டுக்காத்திருக்க, திடீரென அருகில் படையினர் கதைப்பது கேட்க, திடுக்கிட்டுப் போயினர்.

"இவ்வளவு கிட்ட வந்திட்டம்" என நினைத்தபடி, என்ன கதைக்கின்றார்கள் என்பதை அறியக் காதை எறிந்தார்கள். "கொட்டியா இங்க வருமா? இவ்வளவு தூரம் வராது தானே.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 497. | 2ஆம்.லெப்.தில்லைமயில் | புனிதமலர் கந்தசாமி | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 498. | 2ஆம்.லெப்.நீலவள் | ஸ்ரீரஜனி இராசலிங்கம் | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 499. | 2ஆம்.லெப்.ஈகைமதி | திலகவதி சின்னத்தம்பி | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 500. | 2ஆம்.லெப்.நிலவுமதி | இராஜயோகம் கனகசபை | வவுனியா | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 501. | 2ஆம்.லெப்.அமுதினி | சுமதி இராமசாமி | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 502. | 2ஆம்.லெப்.[illegible] | [illegible] | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 503. | 2ஆம்.லெ[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 வருடங்களாக ஏமாற்றப்பட்ட தமிழினம், எதிர்க்கட்சிப் பதவி கிடைத்தும் தோல்வியடைவதா?

இதுவரை தமிழர் தொடர்பான 21 படிநிலைகளில் பேச்சுவார்த்தையும். ஒப்பந்தங்களும் நடந்துள்ளது. இதில் தமிழர்களுக்குச் சாதகமான ஒரு நகர்வும் நடக்கவில்லை. மாறாக லட்சக்கணக்கில் தமிழினம் அழிந்ததுதான் மிச்சம். அதில் சிங்களவரும் புத்தரும் வடக்குக் கிழக்கில் குடியேறியதே வரலாறு. வளரும் நம் இளம் தலைமுறை இதை நன்கு சிந்திக்கவும்.

ஒரு தலைமுறை கடந்தும் இப்போதுள்ள தலைமுறை இந்த விடயங்களைத் தெரிந்து நமது போராட்டத்தை முன்னெடுக்கவும் புலம் பெயர்ந்து வாழும் இளம் தலைமுறையும் இதைக்கொண்டு முன்செல்லும் நோக்குடன் இக்கட்டுரை எழுதப்படுகிறது. எப்போவோ நிறைவேறவேண்டிய தமிழரின் போராட்டங்களும் முஸ்லிம் தலைவர்களால் தென்கிழக்கு அலகு என உருமாறி முறியடிக்கப்பட்டதே வரலாறாகும். இனிமேலும் உள்ள நகர்வுகளில் நம் தலைமுறை இடறிவிடக்கூடாது என்பதே எனது நோக்கம்.

1-1929 டொனமூர் சீர்திருத்தம் - சேர். பொ. இராமநாதனுக்குத் துரோகம்.
2-1930 இலங்கைத் தேசிய காங்கிரஸ் சேர். பொ.அருணாசலம் நீக்கம்.
3-1931 தேர்தல் - சிங்களவர் பங்களிப்பு. யாழ்ப்பாணத் தமிழர் புறக்கணிப்பு.
4-1935 மானிப்பாய்-மகேந்திரா உடன்பாடு. இலங்கை தேசிய காங்கிரஸ் கைவிடல்.
5-1948 டி.எஸ்.சேனநாயக்க துரோகம். சுந்தரலிங்கம் வெளியேறல்.
6-1948 குடியுரிமை பறிப்பு. செல்வநாயகம் முதலானோர் வெளியேறல்.
7-1955 கொக்குவில் வாக்குறுதி. கொத்தலாவலை கைவிரிப்பு.
8-1957 பண்டா-செல்வா உடன்பாடு. பண்டாரநாயக்கா கைவிடல்.
9-1960 சிறீமாவுடன் பேச்சு தோல்வி.
10-1965 டட்லி-செல்வா உடன்பாடு. டட்லி கைவிடல்.
11-1971 வல்வை-அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் பேச்சு. அழைப்புக்குச் சிறீமாவோ மறுப்பு.
12-1980 மாவட்ட வளர்ச்சிச்சபை. நீலன் திருச்செல்வத்தின் அறிக்கையை ஏற்றுப் பின் ஜெயவர்த்தனா கைவிடல்.
13-1983 ஜி.பார்த்தசாரதி உதவியுடன் பேச்சு. அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கைவிரிப்பு.
14-1985 திம்புப் பேச்சுவார்த்தை தோல்வி.
15-1987 ஜெயவர்த்தனா-ராஜீவ் உடன்பாடு. பிரேமதாசா கைவிடல்.
16-1988 குடியுரிமை. ஜெயவர்த்தனா-தொண்டமான் உடன்பாடு நடைமுறையில்.
17-1989 பிரேமதாசா-பாலசிங்கம். யோகி கொழும்புப்பேச்சு. தோல்வி.
18-1995 பாலபத்தபெந்தி - பாலசிங்கம் யாழ்ப்பாணம் பேச்சு. தோல்வி.
19-1999 ஜி.எல். பீரிஸ்-நீலன் திருச்செல்வம் வரைவுகள். சந்திரிகா கைவிடல்.
20-2002 மாசி: நோர்வே மூலம் புரிந்துணர்வு உடன்பாடு. நடைமுறையில்.
21-2002 புரட்டாதி: தாய்லாந்தில் பேச்சுத் தொடக்கம்.

அதன்பின் அரசினால் பாராளுமன்றில் 10க்கும் மேற்பட்ட ஆணைக்குழுக்கள் உருவாக்கி காலத்தைக்கடத்தி அவர்களின் குப்பைக் கூடத்தில் சங்கமம் ஆகின என்பது இப்போதைய வரலாறு. சிங்களவர் - ஈழத்தமிழர் அரசியல் உடன்பாட்டுக்குச் சட்ட வலிவு கொடுப்பது கொழும்பு நாடாளுமன்றமே.

1957 ஆடியில் எழுதிய பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்பாட்டை 1958 மாசியில் ஒருதலையாகப் பண்டாரநாயக்கா கைவிட்டார். நாடாளுமன்றத்துக்குச் சட்டமாக்க அவ்வுடன்பாடு வரவேயில்லை.



1965 பங்குனியில் டட்லி சேனநாயக்கா-செல்வநாயகம் உடன்பாடு வந்தது. 1968வரை அந்த உடன்பாட்டைச் சட்டமாக்கும் முன்வரைவுகளை மு. திருச்செல்வம் தயாரித்து வந்தாலும் அவை நாடாளுமன்றத்துக்கு வரவேயில்லை.

1987 ஜெயவர்த்தனா - ராஜீவ் உடன்பாட்டின் சட்ட வடிவமே கொழும்பு நாடாளுமன்றம் நிறைவேற்றிய அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம். 1988இல் சட்டமாகிய அந்த உடன்பாடு தமிழருக்கு எந்தவித நன்மையையும் தரவில்லை என்பதால், 1989 பங்குனியில் தமிழர் பகுதிக்கான வடகீழ் மாகாண அவை கூடி. சிங்களவர் - ஈழத்தமிழர் முரண்பாட்டைத் தீர்க்க ஒரே வழி தமிழீழம் அமைப்பதே என்ற கருத்தைத் தீர்மானமாக்கிவிட்டுத் தன்னைத்தானே கலைத்துக்கொண்டது. அவைஉறுப்பினர் பலர் இந்தியாவில் தஞ்சமடைந்தனர்.

காரிருளில் மின்னல் கீற்றாக. 1988இன் ஜெயவர்த்தனா - தொண்டமான் உடன்பாடு சட்டமாகி, மலையகத் தமிழர் எவரும் குடியுரிமை பெறும் எளிதான வழியாக இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

1994 முதல் 1999 வரை சந்திரிகா அரசுடன். விடுதலைப்புலிகள் தவிர்ந்த தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக அமர்ந்து பேசின. அரசியலமைப்பை முற்றுமுழுதாக மாற்றியமைக்கும் வரைவுகளுக்கு உடன்பட்டன. அரசியலமைப்பு வல்லுநர்களான ஜி.எல்.பீரிஸ், நீலன் திருச்செல்வம் ஆகியோர் இந்த வரைவுகளைத் தயாரிப்பில் பெரும் பங்காற்றினர். ரணில் கட்சியினரின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத சந்திரிகா, அந்த வரைவுகளை நாடாளுமன்ற விவாதத்துக்குக் கொண்டுவரவில்லை.

கொழும்பு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசைகளில் அமரும் சிங்கள அரசியல்கட்சி எதுவானாலும். தாய்லாந்தில் ஏற்படக்கூடிய சிங்களவர் - ஈழத்தமிழர் உடன்பாட்டைச் சட்டமாக்குவதற்குத் தேவையான ஆதரவைக் கொடுக்காது என ஜெயதேவா உயங்கொடு கூறியுள்ளார். அமைதித் தீர்வு விரைவில் திரும்பவேண்டும் என உணரும் சிங்களக் கல்விமானான ஜெயதேவா, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறைப்பேராசிரியர்.

இன்றைய நாடாளுமன்றத்தில் ரணிலின் அணிக்குச் சாதாரண எண்ணிக்கைப் பெரும்பான்மையே உண்டு. மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கைப் பெரும்பான்மையுடன் மட்டுமே அரசியலமைப்பைத் திருத்த முடியும். எதிர்க்கட்சிகளான சிங்களக் கட்சிகள் ஆதரவின்றிச் சிங்களவர் - ஈழத்தமிழர் உடன்பாடு சட்ட வலிமை பெற முடியாது. இதையே ஜெயதேவா உயங்கொடு கூறியுள்ளார்.

சட்ட வலிவு இல்லாமலே நோர்வேயின் துணையுடன் புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறையில். கொழும்பு அரசின் கட்டுப்பாட்டு எல்லைகள் சுருங்கியதை [illegible] உடன்பாடு ஏற்றுக்கொள்கிறது. வடகீழ் மாகாணத்தின் பெருமளவு நிலப்பகுதிகளில் கொழும்பு அரசின் கோன்மை செயல்நிலையில் இல்லை. அப்பகுதி ஈழத்தமிழர் கட்டுப்பாட்டில் உள்ளதே இப்புரிந்துணர்வு உடன்பாடு கூறும் மெய்நிலை.

சிங்களவர் தாயகத்தில் சிங்களவர் அரசு. தமிழர் தாயகத்தில் தமிழர் அரசு. இரண்டையும் இணைக்கும் கூட்டாட்சி நடுவண் அரசு. இலங்கைத் தீவில் இரு மொழி வழிச் சமூகங்களும் இணைந்து ஆட்சி அமைப்பதற்குரிய ஆகக்குறைந்த ஏற்பாடு இதுதான் எனவும், மாற்றாகத் தீவை இருநாடுகளாகப் பிரிப்பதைத் தவிர வேறுவழியில்லை எனவும், 1949இல் தமிழரசுக் கட்சித் தொடக்க மாநாட்டுத் தலைமை உரையில் கூறியவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம்.

எனினும், கீழிறங்கி வந்து. ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள், 1957இல் பிரதேச சபைகளையும் 1965இல் மாவட்ட சபைகளையும் ஏற்க இணங்கிய பொழுது கூட்டாட்சிக் கொள்கையைத் தமிழர் விட்டுக் கொடுத்தனர். ஒற்றையாட்சி அமைப்புக்குள் எட்டு மாகாண அவைகளை அமைக்க ஜெயவர்த்தனா-ராஜீவ் 1987இல் உடன்பட்டதையும் தமிழர் ஏற்றனர். 1999இல் தமிழர் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பு மீளமைப்பு வரைவும் ஒற்றையாட்சியில் மூன்று பிரதேசங்களைக்கொண்ட அமைப்பாக இலங்கை அமையும் என்றது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றிக் கூட்டாட்சி அரசியலமைப்பை ஏற்படுத்தத் தொடர்ச்சியாக சிங்களவர் மறுத்து வந்தனர். 1949இல் முன்வைத்த தமது கூட்டாட்சிக் கொள்கைக்குக் குறைந்த ஏற்பாடுகளைத் தமிழர் பலமுறை ஏற்றுக்கொண்டும் அந்த உடன்பாடுகளைச் சட்டமாக்கவோ நடைமுறைப்படுத்தவோ சிங்களவர் ஒவ்வொருமுறையும் மறுத்தனர். இதன் விளைவே 1976 மே 14ஆம் நாளது தமிழீழ அரசு அமைக்கும் வட்டுக்கோட்டைத் தீர்மானம். 1977 தேர்தலில் ஈழத்தமிழருள் 80%த்தினர் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

சட்ட வலுவற்ற ஆனால் மெய்நிலையான ஆட்சி தமிழர் பகுதிகளில் இன்று நடைபெற்று வருவதற்கு 1976இன் தீர்மானமும். 1977இன் மக்கள் ஆணையுமே அடித்தள வலுவாகும். இம்மெய்நிலையை ஏற்பதைத்தவிர வேறு வழி கொழும்பு அரசுக்கு இருக்கவில்லை. எனவேதான் புரிந்துணர்வு உடன்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டு இச்செயல் நிலையையும் மெய்நிலையையும் ஏற்றுக் கொண்டுள்ளார். புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வழிவகுத்த நோர்வே அரசு முயற்சியை இந்தியாவும் உலக நாடுகள் பலவும் அங்கீகரித்து வருகின்றன.

தாய்லாந்தில் சிங்களவர் - ஈழத்தமிழர் [illegible] செப்டெம்பர் 16இல் தொடங்குவது உறுதியாகியுள்ளது. "தமிழீழத்தைத்தவிர வேறு எதையும் பேசுவோம்" எனக் கூறியுள்ளார் ரணில். "தமிழீழம் அமைப்பதைக் கைவிடக் கேட்கிறீர்களே, மாற்றாக எந்த ஏற்பாட்டை முன்மொழிகிறீர்கள்?" என்ற வினாவை அமிர்தலிங்கம் முதலாக அனைத்துத் தமிழரும் சிங்களவரைப் பார்த்துக்கேட்டு வந்துள்ளனர்.

ரணில் வரையிலான எந்தச் சிங்களத் தலைவரும் இதுவரை எந்த யோசனையையும் முன்வைக்கவேயில்லை. "வாருங்கள் பேசுவோம்" என்று மட்டும் தொடர்ந்து கூறுகிறார்கள்.

1985 ஆவணியில் திம்புப் பேச்சுவார்த்தையில். இந்தியாவின் முன்னிலையில், விடுதலைப்புலிகள் உள்ளிட்ட தமிழர் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முன்வைத்த அடிப்படை நிலைப்பாடுகளாவன:

1. இலங்கையில் தமிழர் தனியான தேசிய இனம்.

2. இலங்கைத் தீவில் தமிழருக்கெனத் தனித் தாயகப் பகுதி உண்டு.

3. ஈழத்தமிழ்த் தேசிய இனத்துக்குத் தன்னுரிமை உண்டு.

4. இலங்கைத் தீவை நாடாகக் கருதும் தமிழருக்கு அங்கு குடியுரிமையும் மனித உரிமைகளும் உண்டு. 1976இன் தமிழீழத் தீர்மானத்திலிருந்து இறங்கி வந்த நிலைப்பாடுகள் இவை. 1988இல் 4ஆவது நிலைப்பாடு மட்டும் சட்டவடிவம் பெற்றது. "தமிழீழம் அமைப்பதை விட்டுவிடுங்கள். திம்பு நிலைப்பாடுகளை மறந்துவிடுங்கள்.

ஒற்றையாட்சியின் கீழ் சில ஏற்பாடுகளுக்கு உடன்படுவோம். உடன்பாட்டில் கையெழுத்திடுங்கள்" என எளிதாகச் சிங்களவர் சொல்லிவிடலாம். உடன்பட்ட நிலைக்குச் சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்புவரும். 1957, 1965, 1987, 1999 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் எழுதிய உடன்பாடுகளை ஒருதலையாக முறித்ததுபோல் இம்முறை சிங்களவர் முறியார் என்பதற்கு ஏது உறுதி?

போர் மீண்டும் மூளுவதைத் தவிர்க்கவே, ஈழத்தமிழரின் உடனடித் தேவைகள் பற்றி முதலில் எடுத்து நோக்க வேண்டி உள்ளது. ஓர் இடைக்கால அரசைத் தமிழர் தாயகத்துக்கென அமைத்து அந்த அரசே அங்குள்ள குடிமக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுமாறு அமையவேண்டும் என்ற நம்பிக்கையில் சிங்களவர் - தமிழர் தாயகம் முழுமைக்குமான ஓர் இடைக்கால அரசை அமைப்பதுதான் உடன்பாடு எனில் அந்த அரசுக்குரிய சட்ட வலிமையைக் கொழும்பு நாடாளுமன்றம் கொடுக்கவேண்டும். சிங்களக் கட்சிகள் ஒன்றிணையாமல் இது சாத்தியமில்லை.

சாத்தியமற்றவற்றைச் சாத்தியமாக்கும் கலையே அரசியல். தமிழர் தாயகச் செயல் நிலையையும் மெய்நிலையையும் சட்ட நிலையாக்கும் முயற்சியைத் தாய்லாந்துப் பேச்சைத் தொடர்ந்து கொழும்பில் அரங்கேற்றுவதே நாணயமான அரசியல்.

உடன்பாடுகளை முறிப்பதை, மறந்துபோன வரலாறாக்கி. உடன்பாடுகளைச் சட்டமாக்கி முழுமனதுடன் நடைமுறைப்படுத்தும் நாட்டுடைத் தலைவராக எந்தச் சிங்களத் தலைமையும் இருந்ததில்லை இனியும் வரப்போவதில்லை. இணக்க வாழ்வில் இனிமை காணும் புதிய வரலாறு படைக்க இலங்கைத் தீவின் இருமொழி வழி இனங்களும் தயாராகுமா? இருதுருவங்களாக இருந்த பிரச்சினை இப்பொழுது மூன்று வழியாக சிதறியுள்ளதுதான் தற்போதைய நிலை.

நெற்றிப்பொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இவர்கள்? யாருடைய வழிகாட்டலில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்





**கடந்தவாரத் தொடர்ச்சி...**

அவருக்குத் தெரியும் தனக்கு தமிழ்மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று. அப்படியெனில் தன்னை எதிர்த்துப்போட்டியிடுபவருக்கு தமிழர்களின் வாக்குகள் செல்லக்கூடாது எனில் அந்த வாக்குகளை பிரிக்கக்கூடிய ஒருவர் போட்டியிடவேண்டும். அதற்கு சரியான ஆள் சிவாஜிலிங்கம்தான். சிவாஜிலிங்கம் அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு விழ இருந்த வாக்குகளை பிரித்தாரோ என்னவோ, ஆனால் சிவாஜிலிங்கம் போட்டியிடுவதை காரணம்காட்டி மகிந்தவால் பல ஆயிரம் வாக்குகளை சிங்கள மக்களிடம் பெறமுடிந்தது.

அதேபோலத்தான், சிவாஜிலிங்கம் கடந்த பொதுத்தேர்தலிலும் நடந்துகொண்டார். மகிந்தவை எதிர்த்து போட்டியிடுவதாகக் கூறிக்கொண்டு குருநாகல் மாவட்டத்தில் போய் போட்டியிட்டார். அதனால் சிவாஜிலிங்கம்நன்மைஅடையவில்லை ஆனாலும், மகிந்த நன்மை அடைந்தார். சிவாஜிலிங்கத்தைக்காட்டி அவரால் சிங்கள மக்களின் வாக்குகளை அதிகமாகப் பெறமுடிந்தது. இந்த இரண்டு தேர்தல்களிலும் சிவாஜிலிங்கம் மகிந்த தரப்பினரிடம் பணத்தை வாங்கிக்கொண்டே போட்டியிடுகின்றார் என்று அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது.

### யார் இந்த கஜேந்திரகுமார்?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இதுவரை தன்னை மிகத்தீவிர தேசியப் பற்றாளராகவே காட்டிவருகிறார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாக தானே இருப்பதாக காட்டிக்கொள்ளும் கஜேந்திரகுமார். புலிகளுக்கு ஆதரவாக பேசுவதற்கே எல்லோரும் அஞ்சிய காலத்திலேயே. எந்தவித அச்சமும் இன்றி புலி ஆதரவுக் கருத்துக்களைப் பேசியவர்.

கொழும்பில் வாழ்ந்துகொண்டே, தன்னை தமிழ்த்தேசியவாதியாக காட்டிக்கொண்ட அவரது தந்தை குமார் பொன்னம்பலம். தனது குடும்ப நண்பர்களான சிறிமா விட்டில் ஒரு குடும்ப உறுப்பினர்போல உரிமையோடு பழகியவர். அரசாங்கத்திற்கு பிடிக்காத விடயத்தை அறிக்கையாக வெளியிடுவதற்கு முன்னரே அதுபற்றி சிறிமாவுக்கு கூறிவிட்டு அறிக்கை வெளியிடுபவர் என்று கூறப்படுவதுண்டு.

அவரது புதல்வரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக கலந்துகொண்டு வருபவர்.

ஒவ்வொரு தடவை ஐ.நா மனித உரிமைப் பேரவை கூடும்போதும் தவறாது அங்கே பிரசன்னமாகிவிடும் கஜேந்திரகுமார். அந்த ஐ.நா பேரவையால் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப்போவதில்லை என்றும். திரும்பத்திரும்பக் கூறுவார். ஆனாலும் பல இலட்சங்களைச் செலவு செய்துகொண்டு, ஜெனிவாவுக்கு பறந்துசெல்வார். இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்த போது ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்புக்களும் அதற்கு ஆதரவாக குரல்கொடுத்தபோதும் அதனை எதிர்த்தவர் இந்த கஜேந்திரகுமார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அனந்தியைப் போலவே கஜேந்திரகுமாரும் மகிந்தவின் வெற்றியையே விரும்பினார்.

### யார் இந்த சிறிதரன்?

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கில் இராணுவம் தனது கெடுபிடிகளைத் தளர்த்தாத காலத்திலேயே புலிகளின் ஆதரவாளனாக தன்னை இனங்காட்டிக்கொண்டவர் இந்த சிவஞானம் சிறிதரன்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நடந்த பொதுத்தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் புலிகளினால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட கஜேந்திரன். பத்மினி போன்றவர்கள் வெளியேற்றப்பட்டு போட்டியிட சந்தர்ப்பம் மறுக்கப்பட்டபோது, கூட்டமைப்பிற்கு ஒரு புலி முகம் தேவைப்பட்டது. அப்போது அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட சிறிதரன். மிகச் சில நாட்களிலேயே ஊடகங்களில் முக்கிய செய்தியானார்.

பகிரங்கமாகவே புலி ஆதரவு கருத்துக்களை எந்தவித அச்சமும் இன்றி கூறிவந்த சிறிதரன் மீது அனுராதபுரத்தில் வைத்து ஒரு தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அவர் பயணம்செய்த காருக்கு குறிவைத்தவர்கள் அவருக்கு படாமல் சுட்டனர். சுட்டவர்களின் இலக்கு சுடுவது மட்டுமல்ல, அவருக்கு படாமல் சுடுவதும்தான்.

அவரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஒரு பிரபல்யமானவராக வளர்த்துவிட சிலர் விரும்பியதாக அப்போது கூறப்பட்டது, தங்களுக்கு வேண்டிய ஒருவர் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துக்கு வருவதை விரும்பியவர்களே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கலாம் என்றும் அப்போது கூறப்பட்டது.

அவரது சகோதரர்களால் நடாத்தப்படும் தமிழ்வின், லங்காசிறி இணையத்தளங்கள் ஒரு கட்டத்தில் இலங்கையில் தடைசெய்து வைக்கப்பட்டிருந்த போதும், அந்த இணையத்தளங்களின் செய்தியாளர்கள் பகிரங்கமாகவே இயங்கிவந்தனர். ஏன் கொழும்பில் அதற்கென சிறிதரனின் மேற்பார்வையில் அலுவலகமே இயங்கிவந்தது. இவையெல்லாம் எப்படி சாத்தியமாகின என்பது ஒன்றும் விடைகாண முடியாத கேள்விகளல்ல. பல தடவைகள் சிறிதரன் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டதாக செய்திகள் வந்தன. ஆனால் ஒரு விசாரணையைப் பற்றியும் பின்னர் யாரும் அறிந்துகொள்ளவில்லை.

### அண்மைக்கால சம்பவங்கள்

கடந்த பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், சுவிற்சர்லாந்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தை நடாத்தியவர்கள் வேறுயாருமல்ல, விநாயகம் குழுவினர்தான். அவர்களின் கோரிக்கை தாங்களே வேட்பாளர்களை தெரிவு செய்யவேண்டும் என்பதாகத்தான் இருந்தது. மிரட்டும் பாணியில் அவர்கள் நடந்துகொண்டபோது, அவர்களிடம் பிடிகொடுக்காமல் பேசிய மாவை சேனாதிராஜா, தம்பிமாரே, தலைவர் கூட என்னுடன் இப்படிப் பேசியதில்லை என்று பதிலளித்ததாக அப்போது செய்திகள் வெளிவந்திருந்தன. கூட்டத்தை கூட்டியவர்களின் நோக்கம் அனந்தியை வேட்பாளராக்க வேண்டும் என்பதும், கஜேந்திரகுமார் அணியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் சேர்க்கவேண்டும் என்பதாகவே இருந்தது.

அவர்களின் அந்த முயற்சி தோல்வியில் முடிய. தேர்தலில் எப்படியும் கஜேந்திரகுமார் அணியை வெற்றிபெறச்செய்ய விநாயகம் குழுவினர் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். அவர்களுக்காக, அவர்களின் பரப்புரைக்காக கோடிக்கணக்கான பணத்தை வாரி இறைத்தனர்.

இது நடந்தது கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாக. மிக அண்மையில் ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா பிரேரணையைக் கொண்டுவந்தபோது, அதில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பும் வலியுறுத்தப்பட்டது.

அதனை ஒரு சிறந்த நகர்வாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புக்களும் வரவேற்றன. ஆனால் அங்கு சென்றிருந்த கஜேந்திரகுமார், அனந்தி, சிவாஜிலிங்கம் போன்றவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி அதற்கு எதிராக பரப்புரை செய்தனர். அந்தக் கூட்டதைக் கூட்டியவர்கள் வேறு யாருமல்ல, அதே விநாயகம் குழுவினர்தான்.

இந்த அணியினரின் ஆலோசனையின் பேரிலேயே வடக்கு முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனும் இயங்குகின்றாரா என்ற கேள்வி இப்போது எழுவதை தவிர்க்க முடியவில்லை. கடந்த பொதுத் தேர்தலின் போது கஜேந்திரகுமார் அணியினரை வெல்லவைக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் படாதபாடுபட்டார்.

தேர்தலில் நடுநிலைமை வகிக்கப்போவதாக முதலில் அறிக்கை விட்ட முதலமைச்சர். கடைசி முயற்சியாக அவர்களின் வெற்றிக்காக அவர்களுக்கு ஆதரவாகவும் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் (ஜெனீவா கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர்) ரெலோ தலைவர்கள் பாரிசில் கூட்டம் ஒன்றை நடாத்திக் கொண்டிருந்தபோது அங்கே குழப்பம் விளைவிக்கப்பட்டது. செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், கோவிந்தன் கருணாகரன் (ஜனா) ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் நுழைந்தவிநாயகம்குழுவினர்ஜனாவை தாக்குவதற்கு முயற்சித்தனர். கடைசியில் பிரான்ஸ் பொலிசார் வந்து ரெலோ தலைவர்களைப் காப்பாற்றியது.

அதேபோன்ற ஒரு சம்பவம் பின்னர் அவுஸ்திரேலியாவிலும் நடைபெற்றிருக்கிறது. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் நுழைந்த விநாயகம் குழுவைச் சேர்ந்த சில இளைஞர்கள் குழப்பம் விளைவித்துள்ளனர்.

நடந்த சம்பவங்ளையும். நடக்கின்ற சம்பவங்களையும் பார்க்கின்றபோது மேலே நாம் குறிப்பிட்ட அனைவருமே ஒரு அணியின் வழிநடத்தலில் இயங்கி வருவதை உணரலாம். இவர்கள் அனைவருமே தமிழ்த்தேசியத்தின் அதிதீவிர பற்றாளர்கள் போலவே தங்களை இனங்காட்டிவருகின்றனர். தங்களையே உண்மையான புலி ஆதரவாளர்கள் போலவே காட்டிவருகின்றனர். இவர்கள் அனைவரையும் விநாயகம் தலைமையிலான தலைமைச் செயலக குழுவே வழிநடாத்திவருகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர் சிறிலங்கா கடற்படையினர் ஒரு இளம்பெண்ணையும். அவரது குழந்தையையும் அவர்களின் வீட்டில்கொண்டுவந்து விட்டுச் சென்றதாக ஒரு செய்தி. செய்தி அறிந்து நாவற்குழியில் உள்ள அந்த இளம்பெண்ணின் வீட்டை செய்தியாளர்கள் முற்றுகையிட்டபோது. அவர்கள் எதையும் பேசுவதற்குத் தயாராக இல்லை.

ஆனால் அந்த இளம்பெண்ணும் குழந்தையும் செட்டிகுளம் தடுப்பு முகாமில் இருந்தபோது அவர் யார் என்று அடையாளம் கண்டுகொண்ட படையினர் அவரை அழைத்துச்சென்றதாகவும். இதுகாலம்வரை கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அவர்களை அவர்களின் வீட்டுக்கு கொண்டுவந்த கடற்படையினர் வீட்டில் விட்டுச் சென்றதாகவும் மட்டும் தகவல் பெறமுடிந்தது. தங்களை எந்தத் தகவலும் தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையில் விடுதலை செய்ததாகக்கூறிய அந்தப் பெண் எதனையும் பேசுவதற்கு தயாராக இருக்கவில்லை.

அந்த இளம்பெண் வேறு யாருமல்ல இன்று பாரிசில் விடுதலைப் புலிகளின் ஒரு குழுவுக்கு தலைமை தாங்கிக்கொண்டிருக்கும் விநாயகத்தின் மனைவிதான் அவர்.

என்ன இப்போது தெரிகின்றதா? நாம் மேலே கூறியவர்கள் எல்லாம் யாருடைய வழிகாட்டலில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்று?

**சுகுனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அரசியல் கைதிகளா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் அல் ஹூசைன் வடமாகாணத்திற்கு விஜயம் செய்த போது கூறிய கூற்று ஒன்று புலம்பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்களிடம் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவேண்டும் என வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மனித உரிமை ஆணையாளரிடம் கோரியதாகவும். ஆனால் அந்த கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்படுவதை சர்வதேச சட்டங்களோ அல்லது சர்வதேச நாடுகளோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் - என்றும் அவர்களின் வழக்குகள் துரிதமாக விசாரணை செய்யப்பட்டு குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் மனித உரிமை ஆணையாளர் கூறியதாகவும் விக்னேஸ்வரன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

புலம்பெயர்நாடுகளில் உள்ள சில தமிழ் இணையத்தளங்கள் இச்செய்தியை திரிபுபடுத்தியும் வெளியிட்டிருந்தன. தமிழ் கைதிகளை விடுதலை செய்ய ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மறுப்பு என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தக்கூற்றை விக்னேஸ்வரன் ஊடகவியலாளர்களிடம் கூறாமல் சுமந்திரன் கூறியிருந்தால் சில தமிழ் ஊடகங்கள் போர்க்கொடி தூக்கியிருப்பார்கள். அதற்கு தலைகால் வைத்து திரிபுபடுத்தி வெளியிட்டிருப்பார்கள். தமிழ் கைதிகளை விடுதலை செய்ய சுமந்திரன் மறுப்பு என்று கூட செய்தி வெளியிட்டிருப்பார்கள்.

இந்த வேளையில் அரசியல் கைதிகள் என சிறையில் இருக்கும் தமிழ் கைதிகளை அழைக்கலாமா. அரசியல் கைதிகள் யார். போர்க்கைதிகள் யார். குற்றம் சாட்டப்பட்ட கைதிகள் யார் என்று சர்வதேச சட்டங்கள் அல்லது ஐ.நா மனித உரிமை பேரவை போன்ற அமைப்புக்கள் என்ன கூறுகின்றன என நாம் பார்க்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் அல்லது அரசியல் கைதிகள் என யாரும் இலங்கை சிறைகளில் இல்லை என அண்மையில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கூறியிருந்தார்.

அரசியல் கைதிகள் என்ற வரையறைக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்கள் [illegible] யார்களை என்று முதலில் பார்க்க [illegible].

சர்வதேச [illegible] அரசியல் கைதிகள் என்பவர்கள் [illegible] குற்றங்களும் புரியாது அரசியல் நடவடிக்கைகளில் [illegible] அல்லது சாத்வீக ரீதியல் போராட்டங்களை நடத்திய வேளையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுபவர்களே அரசியல் கைதிகள் என்ற வரையறைக்குள் அடக்கப்படுகிறார்கள்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக முன்னர் அமிர்தலிங்கம், நவரத்தினம் போன்றவர்களும். பின்னர் மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன். வண்ணை ஆனந்தன் போன்றவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் எந்த வன்முறைகளோ. குற்றங்களோ புரியாத அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள். இவர்களை போன்றவர்களையே அரசியல் கைதிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றனர்.

இலங்கை [illegible] சிறைகளில் தற்போது இருப்பவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள். யுத்தகாலத்தின் போது வடக்கு-கிழக்கிலும் வடக்கு கிழக்கிற்கு வெளியிலும் பயங்கரவாதக் குற்றங்களைப் புரிந்தார்கள் என்று குற்றம்சாட்டி கைது செய்யப்பட்டவர்கள். இவர்களை குற்றம் புரிந்த கைதிகள் என்றே சிறிலங்கா அரசாங்கம் கூறுகிறது.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என தமிழர் தரப்பில் கோருகின்றபோது தமிழ் அரசியல் கைதிகள் யாரும் தங்களிடம் இல்லை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களே தங்களிடம் இருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் மிக இலகுவாகக் கூறி தமிழர் தரப்பின் கோரிக்கையை நிராகரித்து வருகிறது.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என கோருவதை விட பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும், விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றே தமிழர் தரப்பில் கோரவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் செய்யாத பலர் சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் இலங்கையில் வாழும் எந்த ஒரு தமிழன் மீதும் குற்றம் சாட்ட முடியும்.

தகவல் கொடுக்கத் தவறினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் ஆகக்குறைந்தது 5வருட சிறைத்தண்டனை வழங்கப்படும். பயங்கரவாதி ஒருவரின் நடமாட்டம். அல்லது பயங்கர குற்றம் புரியப்போகிறார் என உணரும் பட்சத்தில் அவரைப்பற்றிய தகவல் படையினருக்கு கொடுக்கவில்லை என்றால் அவர் குற்றவாளியாக கருதப்படுவார். வெளிப்படையாக சொல்லப்போனால் விடுதலைப்புலி உறுப்பினர் அல்லது ஆயுதக்குழு உறுப்பினர் ஒருவரின் நடமாட்டம், அல்லது அவர் பற்றிய தகவல் தெரிந்து அதனை படையினரிடம் தெரிவிக்காவிட்டால் அது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றமாகும். விடுதலைப்புலிகளை தெரியாத அல்லது ஆயுதக்குழுக்களை தெரியாதவர்கள் இலங்கையில் யார் இருக்கிறார்கள்?

இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையின் பலபாகங்களிலும் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள், முஸ்லிம்கள், மலையகத்தமிழர்கள் என பலர் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வந்த பலர் இவ்வாறுதான் கைது செய்யப்பட்டார்கள்.

உதாரணமாக மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு நகருக்குவரும் தமிழ் மக்களை புளொட், மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். ராசிக்குழு போன்ற இராணுவ ஒட்டுக்குழுக்கள் பிடித்து இராணுவ புலனாய்வு பிரிவினரிடமும், பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரிடமும் ஒப்படைத்த வரலாறுகள் பல உண்டு.

இந்த இராணுவ ஒட்டுக் குழுக்களால் பிடிக்கப்படும் அப்பாவி தமிழ் மக்கள் அக்குழுக்களாலும். பின்னர் சிறிலங்கா படையினராலும் சித்திரவதை செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு [illegible] சிறைகளில் [illegible]. அதுபோன்று [illegible] இருந்து இராணுவ கட்டுப்பாட்டு [illegible] வவுனியாவுக்கு வரும் [illegible] வவுனியாவில் இருந்த புளொட் உட்பட இராணுவ தமிழ் ஒட்டுக்குழுக்கள் பிடித்து பயங்கரவாத ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர். அப்பாவி பொதுமக்களான இவர்களில் பலர் இன்னமும் [illegible] வாடுகின்றனர்.



தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோருவதை விடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். என்றும் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றே கோரவேண்டும். இதனை சர்வதேச சமூகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஏற்றுக்கொள்வார்கள். கடந்தமுறை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூட பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலர் விடுதலை செய்யப்பட வாய்ப்பு உள்ளது. பெரும்பாலானவர்கள் நேரடியாக குற்றம் செய்தவர்கள் அல்ல. சாதாரண சட்டத்தின் கீழ் ஒருவரை காரணம் இன்றி மூன்று மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்க முடியாது. இதனால் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் கூட பிணையில் வெளிவர முடியும். பொதுமன்னிப்பு என்பது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்றவர்களுக்கே அன்றி குற்றம் செய்யாது பிழையான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு அவர்கள் நிரபராதிகள் என விடுதலை செய்யப்படவேண்டும். கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்குமாறு கோருவது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அனைவரும் குற்றம் செய்தவர்கள் என கருத இடமளித்துவிடும்.

நிரபராதிகள் விடுதலை செய்யப்படுவதற்கும் தண்டனை பெற்றவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கும் வழிவகை செய்யும் அழுத்தங்களே கொடுக்கப்படவேண்டுமே ஒழிய வெறுமனே தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுங்கள் என வெற்றுக்கோசத்தை வைப்பது கோரிக்கைகளை மிக இலகுவாக சிறிலங்கா அரசாங்கம் நிராகரிப்பதற்கு வழி அமைத்துவிடும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இளவரசர் செய்ட் ராட் அல் ஹூசைனின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கம் கடந்த முறை ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கையின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி ஆராய்வதற்காகவும், போருக்குப் பின்னர் வடக்கு-கிழக்கு உட்பட இலங்கையின் மனித உரிமை முன்னேற்றங்கள் குறித்து பார்வையிடுவதாக [illegible] அமைந்திருந்தது. [illegible] ஆணையிடுவதற்கோ, அல்லது ஐ.நா மனித உரிமை [illegible] யில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கோ அதிகாரம் [illegible] என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறான ஒரு அதிகாரம் ஐ.நா மனித உரிமை பேரவைக்கும் கிடையாது.

ஐக்கிய நாடுகள் சபையில் மூன்று கட்டமைப்புக்கள் உள்ளன:

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை.**

இந்த மூன்று கட்டமைப்புக்களிலும் மிகவும் பலவீனமானதும், அதிகாரம் அற்றதுமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை காணப்படுகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் வேகத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் நிறைவேற்றப்படும் வேகத்தை ஒப்பிட முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தனது அங்கத்துவ நாட்டை கோரலாம். சற்று அழுத்தம் கொடுக்கலாம். பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த படைப்பலத்தை பயன்படுத்துவதற்கு கூட பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் வல்லரசு நாடுகளால் முடியும். ஆனால் அத்தகைய பலமோ அதிகாரமோ ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கிடையாது.

காணாமல் போனவர்கள் விடயத்தில் கூட ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரால் அரசாங்கத்திடமிருந்து உரிய பதிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியவில்லை. இறுதிப்போரில் சரணடைந்ததாக கூறப்படும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் உட்பட காணாமல் போனவர்கள் யாரும் உயிருடன் இல்லை என அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். இதனை உறுதி செய்வது போல கடந்த ஆண்டு ஜனவரி வரை பாதுகாப்பு செயலாளராக இருந்த கோதபாய ராசபக்சவும் சரணடைந்தவர்கள் என யாரும் இல்லை. விடுதலைப்புலிகள் அனைவரும் போரில் கொல்லப்பட்டு விட்டனர் என கடந்த வாரம் மீண்டும் கூறியிருந்தார்.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மீள்குடியேற்றம். இராணுவ வெளியேற்றம் காணாமல் போனோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் விவகாரம், போர்க்குற்ற விசாரணை. அரசியல் தீர்வு என நீண்டு செல்லும் பட்டியலில் இவை எதற்கும் உருப்படியான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் விஜயம் பயன்பட்டிருக்கிறதா? என்றால் அது பூச்சியமாகவே இருக்கிறது.

அமெரிக்கா. இந்தியா போன்ற நாடுகளுக்கு இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய அரசாங்கத்திற்கு நற்சான்றிதழ் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. அந்த நற்சான்றிதழை கொடுப்பதற்காகவே அவரின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாக இருக்கும் ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் இது எதிரொலிக்கலாம்.

**சுழியோடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் - சுதந்திரப்போராட்டம் பற்றிய பார்வை.

கடந்தவாரத் தொடர்ச்சி...

"இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக சிங்களம் இருக்கும். சிங்களத்தை உடனே பயன்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், ஆங்கிலத்தை 1960 டிசெம்பர் 31ஆம் திகதி வரை பயன்படுத்தலாம்" என்று அந்த சட்டம் கூறியது.

## தமிழர்கள் போராட்டம்

இந்தச்சட்டத்தை எதிர்த்து அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது என்று, செல்வநாயகத்தின் "தமிழரசுக்கட்சி" முடிவு செய்தது. "சிங்களம் மட்டும்தான் ஆட்சிமொழி என்ற சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாராளுமன்றத்தின் முன் தமிழ் எம்.பி.க்களும், மற்றும் 200 பேர்களும் உண்ணாவிரதம் இருப்போம்" என்று பண்டாரநாயக்காவுக்கு, செல்வநாயகம் கடிதம் எழுதினார். ஆனால், பண்டாரநாயக்காவின் மிரட்டலுக்கு தமிழர்கள் பயப்படவில்லை. திட்டமிட்டபடி உண்ணாவிரதம் இருக்க ஊர்வலமாகப் புறப்பட்டார்கள். இதில் செல்வநாயகம், அமிர்தலிங்கம், நவரத்தினம் உட்பட முக்கிய பிரமுகர்கள் ஊர்வலத்தின் முன் சென்றனர்.

## பயங்கர தாக்குதல்

பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. எனினும் 500க்கும் மேற்பட்ட சிங்கள வெறியர்கள் கையில் ஆயுதங்களுடனும், சிங்கக்கொடியுடனும் வந்து உண்ணாவிரதம் தொடங்கிய தமிழர்களைத் தாக்கினார். செல்வநாயகத்தின் 14 வயது மூத்த மகன் மனோகரன், தந்தையின் கண்முன்னாலேயே அடித்து நொறுக்கப்பட்டான். செல்வநாயகமும்சேற்றுத்தண்ணீரில்வீசி எறியப்பட்டார்.அமிர்தலிங்கத்தை, சிங்கள வெறியர்கள் தடியால் தாக்கினார்கள். அவரது மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. ஊர்வலத்தினர் "தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டனர். அவர்களை சிங்கள வெறியர்கள் அடித்து நொறுக்கினர். தமிழ் எம்.பி.க்கள் சிலர் மண்டை உடைந்து, ரத்தம் சொட்டச்சொட்ட சுருண்டு விழுந்தனர். சிலரை சிங்களவர்கள் தூக்கிச்சென்று, அருகே இருந்த ஏரியில் வீசினர். இந்தக் கலவரத்தை, பாராளுமன்ற ஜன்னல் வழியாக பண்டாரநாயக்கா பார்த்துக் கொண்டு நின்றார்.

## 150 பேர் பலி

இந்தக் கலவரம் கொழும்பு நகரம் முழுவதும் பரவியது. தெருவில் நடந்து போன தமிழர்களை, சிங்களவர்கள் ஓட ஓட விரட்டித்தாக்கினர். தமிழர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன. இதில் 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய முதல் இனப்படுகொலை இது என்று கூறலாம்.

## ஒப்பந்தம்

இந்த சம்பவத்தால் தமிழர்கள் வாழும்பகுதிகளில் பெரும் கொந்தளிப்பும், பதற்றமும் நிலவுவதை பிரதமர் பண்டாரநாயக்கா உணர்ந்துகொண்டார். தமிழர்களுடன் ஏதாவது சமரசம் செய்து கொண்டால் தவிர, கலவரம் மேலும் பரவும் என்பது அவருக்குப்புரிந்தது. செல்வநாயகத்தை அழைத்துப்பேசினார். பிரதமருக்கும், செல்வநாயகத்துக்கும் இடையே 1957 ஜூலை 27ந் திகதி ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

"இலங்கையில் பிராந்திய சபைகள் அமைக்கப்படும். தமிழர்களுக்கு என்று ஒரு பிராந்திய சபை இருக்கும். அந்த சபையின் நடவடிக்கைகள் தமிழில் நடைபெறும். கல்வி, குடியேற்றம் முதலியவை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் இந்த பிராந்திய சபைகளிடம் இருக்கும்" என்று இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருந்தது.

## ஜெயவர்த்தன பாத யாத்திரை

இந்த ஒப்பந்தத்தை சிங்களவர் கட்சிகள் கடுமையாக எதிர்த்தனர். ஒப்பந்தத்தை எதிர்த்து 1957 ஒக்டோபர் 4ந் திகதி ஜெயவர்த்தன தலைமையில் கொழும்பில் இருந்து கண்டி வரை சிங்களவர்கள் பாத யாத்திரை சென்றனர். ஊர்வலம் சென்ற வழி எங்கும் கல்வீச்சு நடந்தது. இதனால், ஜெயவர்த்தனவும், மற்றவர்களும் கார்களில் ஏறி, கண்டிவரை சென்று, தங்கள் "பாதயாத்திரை"யை நிறைவு செய்தனர்! பண்டாரநாயக்கா மந்திரிசபையில் இடம்பெற்றிருந்த விமலா விஜயவர்த்தன, சிங்கள புத்த பிக்குகளை திரட்டிக்கொண்டு போய், பிரதமர் பண்டாரநாயக்கா வீட்டுமுன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

## கிழித்து எறிந்தார்

சிங்களவர் எதிர்ப்பைக்கண்டு, பண்டாரநாயக்கா பயந்துபோனார். சிங்களவர்களின் கோரிக்கையை ஏற்கத் தீர்மானித்து ரத்து செய்வதாக அறிவித்தார். "ஒப்பந்தத்தை கிழித்து எறி!" என்று ஒரு புத்தபிக்கு கூச்சலிட்டார். உடனே செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் 'ஒரிஜினல்' பிரதியைக் கொண்டுவந்து, சிங்களவர் முன்னால் சுக்குநூறாக கிழித்து எறிந்தார் பண்டாரநாயக்கா. இதற்கு தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இலங்கை முழுவதும் மீண்டும் இனக்கலவரம் வெடித்தது. தமிழர்களின் வீடுகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் கொளுத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொழும்பு நகரில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வீடு, வாசலை இழந்து அகதிகள் ஆனார்கள். அவர்கள் கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போகப்பட்டனர். தமிழ் எம்.பி.க்கள் உட்பட நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தமிழர்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை காணப்பட்டது. நிலைமையை சமாளிக்க ஒரு புதிய சட்டத்தை பிரதமர் பண்டாரநாயக்கா கொண்டு வந்தார். தமிழ்ப் பகுதிகளில் அரசாங்க நிர்வாகத்தில் தமிழைப் பயன்படுத்தலாம் என்று அந்த சட்டம் கூறியது.

## இலங்கை பிரதமர் பண்டாரநாயக்கா கொலை

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா சிங்கள புத்தப் பிட்கு ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். பண்டாரநாயக்கா பிரதமர் ஆவதற்குபுத்தபிட்குகளும்சிங்களவர் கட்சிகளும் ஆதரவாக இருந்தனர்.

இந்நிலையில் தமிழ் பகுதிகளில் வாழ்கிறவர்கள் அரசாங்கத்துடன் தமிழில் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் இயற்றியதால் புத்தப் பிக்குகளும் சிங்கள வெறியர்களும் ஆத்திரம் அடைந்தனர். 1959 செப்டம்பர் 25ஆம் திகதி காலை சுமார் பத்து மணிக்கு தன்னைக்காண வந்தவர்களுக்கு பேட்டியளிக்க வெளியே வந்தார்பண்டாரநாயக்கா.வெளியேபெரிய கூட்டம் கூடியிருந்தது. எல்லோரையும் பார்த்து பண்டாரநாயக்கா கைக்கூப்பி வணங்கினார். பிறகு தன் அறைக்கு திரும்பி ஒவ்வொருவராக அழைக்க எண்ணினார். அவர் திரும்புவதற்குள் கூட்டத்தில் இருந்த புத்த சாமியார் ஒருவன் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து இரண்டு கைகளிலும் பிடித்துக்கொண்டு பண்டாரநாயக்காவைச் சுட்டான். ஆறு குண்டுகள் சீறிப் பாய்ந்தன. மார்பிலிருந்து ரத்தம் பீறிட பண்டாரநாயக்கா கீழே சாய்ந்தார். பண்டாரநாயக்காவின் உதவியாளர் ஒருவர் மீதும் குண்டு பாய்ந்து, படுகாயம் அடைந்தான். பண்டாரநாயக்காவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள். அவரைத் துப்பாக்கியால் சுட்ட புத்த சாமியாரை அருகில் இருந்தவர்கள் சூழ்ந்துக் கொண்டு அடித்து நொறுக்கினார்கள். பொலீசார் விரைந்து வந்து சாமியாரை கைதுசெய்து ஜெயிலுக்கு கொண்டுப்போனார்கள். ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்ட பண்டாரநாயக்காவிற்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது உடலில் 4 குண்டுகள்பாயந்திருந்ததைவைத்தியர்கள் கண்டுபிடித்தனர். ஒருகுண்டு வயிற்றில் பாய்ந்து இருந்தது. மற்றொரு குண்டு கல்லீரலைத் துளைத்திருந்தது. மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தாலும் மரணப் படுக்கையில் இருந்தவாறே அவர் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

"ஒரு முட்டாள் என்னை சுட்டுவிட்டான். பொதுமக்கள் பொறுமையுடன் இருக்கவேண்டும். அவனை பழிவாங்கக்கூடாது. நெருக்கடியான இந்த தருணத்தில் எல்லோரும் பொறுமையுடன் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் பிழைத்து எழுந்து மீண்டும் மக்களுக்கு சேவை செய்வேன் என்று நம்பிக்கை இருக்கிறது" என்று அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். எனினும் அவர் நம்பிக்கை வீணாயிற்று. மறுநாள் (26ந்திகதி) காலை எட்டு மணிக்கு அவர் மரணம் அடைந்தார். உயிர் பிரியும் போது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் குழந்தைகள் முக்கிய அமைச்சர்கள் அருகில் இருந்தனர். பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இலங்கையை மட்டுமல்ல உலக நாடுகளையெல்லாம் அதிர்ச்சி அடையச் செய்தது. கொடிகள் அரை கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

இந்திய பிரதமர் நேரு, ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் ஆகியோர் அனுதாப செய்திவிடுத்தனர். பண்டாரநாயக்காவின் மரணத்தைத் தொடர்ந்து இலங்கை மந்திரி சபை கூட்டம் நடந்தது. தற்காலிக பிரதமராக மூத்த மந்திரி தசனாயக்கா தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். பண்டாரநாயக்கா இறக்கும்போது வயது அறுபது. அவர் 1899ஆம் ஆண்டு ஜனவரி 8ந் திகதி பிறந்தார். லண்டனுக்குப்போய் சட்டம் படித்தார். வழக்கறிஞராக பணி புரிந்தார். 1927ல் அரசியலில் ஈடுபட்டார். 1931ல் இருந்து இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். 1936 ஆம் ஆண்டு முதல் மந்திரியாக இருந்து வந்தார். பண்டாரநாயக்காவின் மனைவி சிறிமாவோ பிற்காலத்தில் பிரதமராகி "உலகின் முதல் பெண் பிரதமர்" என்று புகழ் பெற்றவர். மகள் சந்திரிக்கா இலங்கைப் பிரதமராகவும், அதிபராகவும் பதவிக்கு வந்தவர். இலங்கை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது பண்டாரநாயக்காவின் குடும்பம். பண்டாரநாயக்காவை சுட்டு கொன்றவனிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவன் பெயர் சோமராம தேரோ. பண்டாரநாயக்கா தேர்தலில் நின்றபோது அவருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தவன். பண்டாரநாயக்காவை சுட்டுக்கொன்ற சோமராமதேரோ மீது வழக்கு தொடரப்பட்டது.

இலங்கையில் தூக்கு தண்டனை விதிப்பதை பண்டாரநாயக்கா ஏற்கனவே ரத்துச் செய்திருந்தார். பண்டாரநாயக்காவிற்கு பின் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் தூக்கு தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்தைக்கொண்டு வந்தார். சோமராமதேரோவிற்கு கோர்ட்டில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி அவன் தூக்கில் போடப்பட்டான். திருமதி பண்டாரநாயக்கா பிரதமர் ஆனார்.

## "சிங்களம்தான் ஆட்சி மொழி" என்று பிரகடனம்

பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டதைத்தொடர்ந்து பிரதமர் ஆன தகனாயக்கா ஆட்சி 6 மாதம் மட்டுமே நீடித்தது. கட்சிக்குள் மோதல் ஏற்பட்டதால், ஆட்சி கவிழ்ந்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டதால், அவருடைய "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி"க்கு ஆதரவாக நாடு முழுவதும் அனுதாப அலை வீசியது. 1960ல் நடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகத்தான வெற்றி பெற்றது. பண்டாரநாயக்காவின் மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையுடன் 1960 ஜூலை 21ந் திகதி பதவி ஏற்றார். இவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. எனவே இலங்கை மேல் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் மிக முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1961 ஜனவரி 1ந் திகதி முதல் இலங்கை முழுவதும் சிங்களம் மட்டும்தான் ஆட்சி மொழி என்று உத்தரவிடப்பட்டது. நாடு முழுவதும் நீங்கள் சிங்களத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள். தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டும், கோர்ட் நடவடிக்கைகளையும், அரசாங்க அலுவலக வேலைகளையும் தமிழில் நடத்த அனுமதியுங்கள்" என்று செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி கேட்டுக்கொண்டது. இதை, சிங்களவர் கட்சிகள் ஏற்கவில்லை. இதுகுறித்து பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை, சிங்களக் கட்சிகள் தோற்கடித்தன.

சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தை எதிர்த்து, அகிம்சை வழியில் போராட்டம் நடத்த தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. இந்த சட்டத்தை எதிர்த்து, ஜனவரி 2ந் திகதியன்று தமிழர் பகுதிகளில் முழு அடைப்பு ("பந்த்") அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடந்தது. இதை சிங்கள அரசு கண்டுகொள்ளவில்லை. சிங்களத் திணிப்பை தீவிரப்படுத்தியது. பெப்ரவரி 20ந் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள அரசு அலுவலகத்தின் முன், செல்வநாயகமும், தமிழரசுக் கட்சியின் தொண்டர்களும் "சத்தியாக்கிரக" போராட்டத்தில் ஈடுபட்டனர். எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து, சிங்களச் சட்டத்துக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர். யாழ்ப்பாணத்தில் தொடங்கிய இந்த போராட்டம், தமிழர்கள் வாழும் இதர பகுதிகளுக்கும் பரவியது.

திருகோணமலையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலீசார் கண்மூடித்தனமாக தடியடி நடத்தினார்கள். இதில் படுகாயம் அடைந்த ஏகாம்பரம் என்ற தமிழர் மரணம் அடைந்தார். இதனால் செல்வநாயகம், அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தார். "அஹிம்சை போராட்டத்துக்கு அரசாங்கம் பணிய மறுப்பதால், சட்ட மறுப்பு போராட்டத்தைத் தொடங்குவோம்" என்று அறிவித்தார். ஏப்ரல் 14ந் திகதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அவர் அரசு தபால் நிலையத்துக்குச் சென்றார். தபால் அதிகாரி (போஸ்ட் மாஸ்டர்) இருக்கையில் அமர்ந்து, தபால் தலை களை பொதுமக்களுக்கு வழங்கினார். அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

## இதைத்தொடர்ந்து ஏப்ரல் 17ஆம் திகதி, "நெருக்கடி நிலை" பிரகடனம்

செல்வநாயகமும், தமிழரசு கட்சியின் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். தொண்டர்களும் வேட்டையாடப்பட்டனர். தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை ஒடுக்க, ராணுவம் பயன்படுத்தப்பட்டது. போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ராணுவம் ஒடுக்கியது. செல்வநாயகமும் மற்றும் 8 பேர்களும் 6 மாதங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் 3 ஆண்டு ஜெயில் தண்டனை அனுபவித்தனர். தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அரசுடமை ஆக்கி சிறிமாவோ உத்தரவிட்டார். அந்தப் பள்ளிக்கூடங்களில், சிங்கள இனத்தின் வரலாறு போதிக்கப்பட்டது. புத்த மதத்தின் சிறப்பை விளக்கி பாடம் நடத்தப்பட்டது. தமிழர்கள் இதை எதிர்த்தபோதிலும் பலன் ஏதும் இல்லை. சிங்களப் பகுதிகளில் இருந்த பல தமிழ் பள்ளிகள் மூடப்பட்டன. பல பள்ளிகள் சிங்களப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. தமிழர்களின் குழந்தைகள் சிங்களம் படித்தே தீரவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டனர்.


இந்த நிலையில் 1961 டிசெம்பரில் புது உத்தரவு ஒன்றை சிறிமாவோ பிறப்பித்தார். "அரசு ஊழியர்கள், வேலையில் நீடிக்க வேண்டுமானால், சிங்களம் படிக்க வேண்டும். சிங்கள மொழியில் புலமை பெறவேண்டும். அப்போதுதான் வேலையில் நீடிக்கமுடியும்" என்பதே அந்த உத்தரவு. சிங்களம் படிக்க விரும்பாத தமிழ் ஊழியர்கள், மலேசியா, கானா, நைஜீரியா, ஜாம்பியா முதலிய நாடுகளில் வேலை தேடிக்கொண்டு, இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கினர். தமிழர்கள் புதிதாக அரசு வேலையில் சேரமுடியாத நிலைமை ஏற்பட்டது. சிங்களம் தெரிந்தவர்கள் மட்டுமே வேலைக்கு விண்ணப்பிக்க முடியும். இலங்கையில், பிரஜா உரிமை மறுக்கப்பட்டு, "நாடற்றவர்கள்" என்று அறிவிக்கப்பட்ட தமிழர்கள் எண்ணிக்கை 10 லட்சமாக உயர்ந்திருந்தது.

தொடரும்...

மறவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்





## மன்னார் பொது வைத்தியசாலையின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்வு

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும். வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள் குறித்தும் ஆராயும் விசேட கலந்துரையாடல் காலை மன்னார் பொதுவைத்தியசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

சிறிலங்கா ஜனரஜ சுகாதாரசேவைகள் சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் எஸ்.எம். இல்ஹாம் தலைமையில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலில் மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஈட்டன் பீரிஸ். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன். வடமாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன். றிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மன்னார் மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற சிற்றூழியர்கள் பலர் கலந்துகொண்டனர். இதன்போது பல வருடங்களாக மன்னார் பொது வைத்தியசாலையில் சிற்றூழியர்களாக கடமையாற்றுபவர்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். குறிப்பாக 20 வருடங்களுக்கு மேலாக மன்னார் பொது வைத்தியசாலையில் பலர் சிற்றூழியர்களாக கடமையாற்றி வருகின்றனர். நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது யுத்தத்தின் காரணமாக காயமடைந்து. உடல் அங்கங்களை இழந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு நாளாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் அழைத்து வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது சிறந்த முறையில் இரவு பகல் பாராது. மேலதிக கொடுப்பனவுகளை எதிர்பார்க்காமல் சேவை செய்த சிற்றூழியர்கள் இன்று அடிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஆதங்கம் தெரிவித்தனர்.

அத்தோடு பொதுவான சிரமதானம் மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களுக்கு வைத்தியசாலையில் உள்ள சிற்றூழியர்கள் மாத்திரமே அழைக்கப்பட்டு வேலை வேண்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். உரிய அதிகாரிகளுக்கு கீழ்படியாதுவிட்டால் இடமாற்றம் பெற்றுச்செல்வீர்கள் என தம்மை அச்சுறுத்துவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தற்போது அவர்களின் சீருடை வெள்ளை நிறமாக காணப்படுகின்றபோதும். வேறு நிற உடைகளை அணிந்துகடமையில்ஈடுபட அச்சுறுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்து தருமாறும். குறிப்பாக மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற சிற்றூழியர்கள் தொடர்ச்சியாக உயர் அதிகாரிகளினால் பழிவாங்கப்படுவதாகவும். அவற்றை தடுத்து நிறுத்தி பாதிக்கப்பட்டுள்ள சிற்றூழியர்களுக்கு நியாயத்தை பெற்றுத்தருமாறு வருகை தந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன். வடமாகாணசபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன். றிப்கான் பதியுதீன் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கொழும்பு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம்

கொழும்பு - மட்டக்குளி அருள்மிகு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. அதி காலை முதல் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. அருட்கவியரசு பண்டித ஆச்சாரிய விஸ்வப்பிரம்ம வை.இ.எஸ்.காந்தன் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேக பெருவிழா நடாத்தப்பட்டது.

இதன்போது தேசிய கலந்துரையாடல். சகவாழ்வு மற்றும் அரச கருமமொழி அமைச்சர் மனோ கணேஷன் மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எஸ். மகேஸ்வரன் ஆகியோரும் இன்றைய தினம் மகா கும்பாபிஷேக பெரு விழாவில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை மாணவர்களிடமிருந்து சங்கிலியை மீட்ட ஆசிரியர்

யாழ்.திருநெல்வேலி கெற்றப்போல் சந்தி பகுதியில் ஆசிரியையின் சங்கிலியை அறுக்க முயன்ற பாடசாலை மாணவர்களிடம் இருந்து ஆசிரியர் போராடி காயமடைந்து தனது சங்கிலியை மீட்டுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ஒருவர் காலை 7.45 மணியளவில் பாடசாலைக்கு சைக்கிளில் வந்து கொண்டிருந்த நிலையில் பாடசாலை சீருடை அணிந்த இளைஞன் ஒருவனும். சாதாரண சீருடை அணிந்த இளைஞன் ஒருவனும் மோட்டார் சைக்கிளில் வந்து குறித்த ஆசிரியரின் சங்கிலியை அறுக்க முயன்றுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஆசிரியை சைக்கிளில் இருந்து விழுந்ததுடன் சங்கிலியை பிடித்துக்கொண்டு கூச்சலிட்டுள்ளார். இதனால் ஆசிரியைக்கு கழுத்திலும். கையிலும் காயம் உண்டாகியுள்ளது. எனினும் ஆசிரியர் போராடி சங்கிலியை மீட்டுள்ளார். எனினும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



## ஹற்றனில் பெண்ணொருவரை தேடி பொலிஸ் வலைவீச்சு

கையடக்கத்தொலைபேசி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்து. சக வாடிக்கையாளரது கைப்பையை திருடிச்சென்ற பெண்ணை கைது செய்ய பொலிஸார் வலைவீசியுள்ளனர். ஹற்றன் நகரிலுள்ள கையடக்கத்தொலைபேசி விற்பனை நிலையமொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு வருகை தந்த சந்தேக நபரான பெண். இன்னொருவரது பையை திருடிச்செல்லும் போது அங்கு பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.டி.வி கெமராவில் காணொளி பதிவாகியுள்ளது.

இதனை பயன்படுத்தி குறித்த பெண்ணை கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தனது கைப்பையில் வீட்டிற்குத் தேவையான சிறிய மின்குமிழ்கள் காணப்பட்டதாக தெரிவித்த அதன் உரிமையாளர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## அரசியல் யாப்பு சீர்திருத்தம் – 75 யோசனைகள் முன்வைப்பு

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் மீதான பொது மக்களின் யோசனைகளை கேட்டறியும் இரண்டாம் நாள் அமர்வு 20.02.2016 அன்று நுவரெலியா மாவட்ட செயலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெற்றது. 20.02.2016 அன்றைய இரண்டாம் நாள் அமர்வில் சுமார் 45 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் அரசியல் தொடர்பான கூடுதலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட அதே வேளை பெருந்தோட்ட துறையைச் சார்ந்த ஆசிரியர்கள், பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள், அரசியல் மற்றும் தொழிற்சங்கவாதிகள் சிலர் தமது யோசனைகளை வாய் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் குழுவினரிடம் கையளித்தனர்.

இதில் முக்கியமாக மலையக ஆய்வகம், இலங்கை தொழிலாளர் முன்னணி, ஜனநாயகத்துக்கான சமாதான வழக்கறிஞர் அமைப்பு, சிங்கள தமிழ் கிராமிய வலையமைப்பு, இளம் சமூக விஞ்ஞானிகள் அமைப்பு, சர்வமத மகளிர் அமைப்பு, அதிர்வுகள் பெண்கள் அமைப்பு மற்றும் பல குழுக்கள் தமது யோசனைகளை வருகை தந்திருந்த உத்தேச அரசியல் சீர்திருத்த பொது மக்கள் கருத்தினை கேட்டறியும் நால்வர் அடங்கிய குழுவினரிடம் கையளித்தனர். மலையகத்திற்கு தனியான அலகு மலையக மக்களுக்கு தனி அடையாளம். காணி உரிமை மதம் மற்றும் மொழிகளுக்கான உரிமை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. ஜனாதிபதி, உப ஜனாதிபதிகள், ஆளுனர், உப ஆளுனர்கள் இன விகிதாசார ரீதியாக நியமிக்கப்படவேண்டும்.

பெண்களின் பிரதிநிதித்துவம் 50 வீதம் உயர்த்தப்படவேண்டும். சட்டம் கடுமையாக்கப்படவேண்டும். மலையக மக்களுக்கு 20 பேர்ச் காணி ஒதுக்கப்பட்டு காணி உறுதி வழங்கப்படவேண்டும். தோட்டப்புறங்கள் கிராமங்களாக மாற்றப்பட்டு உள்ளூராட்சி அமைப்புகளின் சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும், பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச சபைகள் அதிகரிக்கவேண்டும் என யோசனைகள் முன்வைக்கப்பட்டது. அத்தோடு இடம்பெற்ற இந்த இரண்டு நாள் அமர்வுகளில் மொத்தமாக 75 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கருத்துகளும், யோசனைகளும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியா லிந்துலை விவசாயிகள் கவலை

நுவரெலியா விவசாய திணைக்களத்தின் கீழ் லிந்துலையில் இயங்கும் விவசாய திணைக்கள கிளை காரியாலயத்தில் இருக்கின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் சலுகைகள் இப்பிரதேசத்தில் உள்ள தோட்ட விவசாயிகளுக்கு கிடைக்கப்பெறுவதில்லை என இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாக தற்போது உரம் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கின்ற நிலையில் விவசாய திணைக்களத்தின் ஊடாக மாணிய விலையில் உரத்தினை பெற்றுக்கொடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கப்படவில்லைஎன விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அத்தோடு கடந்த காலங்களில் பெய்த மழையால் பல விவசாயிகளினால் பயிரிடப்பட்ட பயிர்கள் சேதமாகியதோடு சில இடங்களில் வெள்ளத்தினால் மரக்கறி வகைகள் அடித்துச்செல்லப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையிலும் எவ்வித நிவாரண உதவிகளும் கிடைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கும் இவர்கள் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு விவசாய சங்கத்தினை உருவாக்கப்பட வேண்டும். ஆனால் சில கிராம சேவகர் பிரிவில் மாத்திரமே சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அதற்கு சிறு சிறு உதவிகள் வழங்கப்படுகின்றன. அதிகமான கிராம சேவகர் பிரிவில் சங்கங்களை அமைப்பதற்கு அதிகாரிகள் அசமந்தபோக்கினை கடைப்பிடிப்பதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமான விவசாய திட்டத்தினை சரியான முறையில் கொண்டுசெல்வதற்கு அதிகாரிகளின் ஆலோசனைகளிலேயே தங்கியுள்ளது. எனவே லிந்துலை பிரதேசத்தில் இயங்கும் விவசாய திணைக்களம் தொடர்ச்சியாக அசமந்தபோக்கினை கைவிட்டு விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும், விவசாய சங்கங்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தோட்டப்பகுதிகளில் விவசாயங்களை மேற்கொள்ளும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் 18.02.2016 டெங்குத்தொற்றுக்குள்ளான ஒருவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். வவுனியா மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த ஜோன் பீற்றர் 21வயதுடைய இளைஞனே டெங்குத் தொற்றுக்குள்ளான நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பலநாட்களாக கொழும்பில் வேலையின் நிமித்தம்தங்கியிருந்துள்ளதாகவும்உறவினர்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலங்களில் வவுனியாவில் டெங்கு நுளம்பைக்கட்டுப்படுத்த அதிகாரிகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை தோட்ட பகுதியில் உள்ள காடு 19.02.2016 அன்று திடீரென தீப்பற்றியதால் சுமார் 15 ஏக்கர் காடு தீயினால் எரிந்து சாம்பலாகியுள்ளது. மலையக பகுதிகளில் தொடர்ச்சியாக காடுகள் இனந்தெரியாதவர்களால் தீ மூட்டப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இளம் இயக்குனருக்கு வாய்ப்பு கொடுத்த சூர்யா



சூர்யா தற்போது 24 மற்றும் S3 ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இப்படங்கள் முடிந்த கையோடு மிருதன் பட இயக்குனர் சக்தி சௌந்தர் ராஜன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவுள்ளாராம். சமீபத்தில் இவர் கூறிய கதை ஒன்று சூர்யாவை மிகவும் கவர்ந்ததாக கூறப்படுகின்றது.

மேலும், முன்னணி தயாரிப்பு நிறுவனம் ஒன்று இப்படத்தை தயாரிக்க ஆவலுடன் இருப்பதாகத் தெரிகின்றது.

## விஷாலின் அதிரடி திட்டம்



நாசர் தலைமையிலான அணி நடிகர் சங்கமாக பொறுப்பேற்ற பிறகு பல அதிரடி மாற்றங்கள் செய்து வருகின்றனர். ஜஜ சினிமாஸ் வசம் இருந்த நடிகர் சங்க இடத்தை பணம் கொடுத்து மீட்டனர். சங்கத்தின் கடனை அடைக்க இப்போது புது முயற்சியாக சினிமா நட்சத்திரங்கள் பங்கேற்கும் Cricket போட்டி ஏப்ரல் 10ம் திகதி சென்னையில் நடத்தவுள்ளனர். அதற்காக ரஜினி, கமல் உட்பட அனைத்து நடிகர்களும் இதில் கலந்துகொள்வார்கள் என விஷால் தெரிவித்துள்ளார்.

நடிகர் சங்க வளாகத்தில் நடந்த 'அவன் அவள்' பட ஓடியோ வெளியீட்டு விழாவிற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர் இத்தகவலை கூறியுள்ளார்.

## நயன்தாரா படைத்த சாதனை



நயன்தாரா ஒரு படத்தில் இருக்கிறார் என்றால் நம்பி போகலாம் என்ற நிலை வந்துவிட்டது. இவர் நடிக்கும் படங்களுக்கு ஒரு ஹீரோவிற்கு நிகரான மாஸ் ஓப்பனிங் கிடைக்கின்றது.

இந்நிலையில் இவர் நடிப்பில் கடந்த வருடம் வெளிவந்த மாயா திரைப்படம் மாபெரும் வெற்றிபெற்றது. இப்படம் தமிழ்நாடு மட்டுமன்றி கேரளாவிலும் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் இப்படம் 100 நாட்கள் அங்கு ஓடியதாம். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள் படங்கள் கூட இத்தனை நாட்கள் கேரளாவில் ஓடியது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அஜித்தை விட விஜயைத் தான் மிகவும் பிடிக்கும் - டிடி



சின்னத்திரை தொகுப்பாளர்களில் என்றும் நம்பர் 1 டிடி தான். இவர் சமீபத்தில் தமிழகத்தின் முன்னணி வார இதழ் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளார். இதில் இவரிடம் ரஜினி, கமல் பற்றிய நிறைய பேசிவிட்டோம், விஜய், அஜித் பற்றி கூறுங்கள் எனக் கேட்டனர்.

அதற்கு அவர் 'விஜய் சார் தான் என் பேவரிட், அவருக்குத் தான் நான் அதிக லைக்ஸ் கொடுப்பேன், ஏனெனில் அவர் நடனம் என்றால் எனக்கு உயிர். சின்ன சின்ன முகபாவனைகளில் கவர்ந்து இழுத்து விடுவார்' எனக் கூறியுள்ளார்.

## ஈகோவும், சண்டையும் இல்லை – சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயனின் பிறந்தநாள் சமீபத்தில் ரெமோ படக்குழுவினர்களால் கொண்டாடப்பட்டது. இவரின் போட்டியாளர் என்று சொல்லப்படும் விஜய் சேதுபதி கூட இவருக்கு வாழ்த்து கூறினார். விஜய் சேதுபதியின் சேதுபதி படம் திரைக்கு வந்துள்ளது. இதற்காக சிவகார்த்திகேயன் தன் வாழ்த்துக்களை இவருக்கு தெரிவித்துள்ளார்.

மேலும், எங்களுக்குள் எந்த ஒரு ஈகோவும் இல்லை. சண்டையும் இல்லை என இதன் மூலம் மீண்டும் சிவகார்த்திகேயன் நிருபித்துள்ளார்.

## ஆச்சரிய கூட்டணி அமைத்த கார்த்திக் சுப்புராஜ்



பீட்சா, ஜிகர்தண்டா, இறைவி என மூன்று படங்களிலும் வித்தியாசமான கதைக்களத்தை கொடுத்து வெற்றி கண்டு வருபவர் கார்த்திக சுப்புராஜ். இவருடைய அடுத்த புதிய படத்தில் உதயநிதி ஸ்டாலினுடன் கைகோர்த்துள்ளார் என்ற செய்தி கோடம்பாக்கத்தை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இவர்களின் கூட்டணியில் தயாராக இருக்கும் படத்தை ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்க, படப்பிடிப்பு ஓகஸ்ட் மாதம் தொடங்க இருக்கிறது.

## அரசியல்வாதியாகும் த்ரிஷா

நடிகைகள் அரசியலுக்கு வருவது ஒன்றும் அரிதான விஷயம் அல்ல. காலம் காலமாக பல நடிகைகள் அரசியலில் ஜெயிக்கத்தான் செய்திருக்கிறார்கள். இப்போது தனுஷ் நடிக்கும் கொடி படத்தில் நடித்துவரும் த்ரிஷா,



அதில் அரசியல்வாதியாக நடிக்கிறாராம். படப்பிடிப்பிற்காக த்ரிஷா படத்துடன் ஒரு பிரம்மாண்ட [illegible] அதன் மூலம் இந்த [illegible] துரை செந்தில்குமார் இயக்கத்தில் உருவாகிவரும் இந்த படத்தில் தனுஷ் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக த்ரிஷா மற்றும் ப்ரேமம் புகழ் அனுபமா நடிக்கின்றனர்.

## மலருக்காக எடையைக் குறைக்கும் கொம்பன்



ஓ காதல் கண்மணி படத்திற்கு பிறகு மீண்டும் பழைய பார்முக்கு வந்து விட்டார் இயக்குனர் மணிரத்னம். இப்படத்துக்கு பிறகு மீண்டும் இளம் நடிகர்களுடன் கை கோர்ப்பதாக கூறப்பட்டது. துல்கர் சல்மான், நானி, கார்த்தி என பல பெயர் அடிபட கடைசியாக கார்த்தி தான் நடிககிறார் என உறுதியாகியுள்ளது.

இப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக பிரேமம் சாய்பல்லவி நடிக்கவுள்ளார். இப்படத்துக்காக கொம்பன் கார்த்தி உடல் எடையை குறைக்கவுள்ளாராம்.

## தெறிக்கு வரும் சிக்கல்



இளைய தளபதி விஜய் நடிப்பில் ஏப்ரல் மாதம் பிரமாண்டமாக வெளிவரும் படம் தெறி. இப்படத்தின் எதிர்ப்பார்ப்பு குறித்து நாங்கள் சொல்லி தெரிய வேண்டியது இல்லை. ஆனால், விஜய் படங்கள் தமிழ்நாடு மட்டுமன்றி கேரளா, ஆந்திரா, வெளிநாடு வரை நல்ல வியாபாரம் இருக்கும். இந்தமுறை தெறி படத்துடனோ அல்லது ஒருவார இடைவெளியில் பவன் கல்யாண் நடிப்பில் சர்தார் கப்பர் சிங் படமும் வரவிருக்கின்றது.

இந்நிலையில் பவன் கல்யாணுக்கு கேரளா, வெளிநாடுகளில் அதிக ரசிகர்கள் இருப்பதால் தெறி படத்தின் வசூலுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ என தற்போதே ஒரு பேச்சு எழுந்து வருகின்றது.

## தனுசுடன் இணைகிறார் கௌதம்



தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு தனித்துவம் உள்ள இயக்குனர்களில் கௌதம் மேனனும் ஒருவர். இவர் அடுத்து தனுசுடன் இணைந்து என்னை நோக்கி பாயும் தோட்டா என்ற படத்தை இயக்கவுள்ளார்.

ஆனால், இப்படம் உருவாக முக்கிய காரணம் ஒரு நெகிழ்ச்சி சம்பவம் தானாம். கௌதமின் தந்தை இறந்த நேரத்தில் அவர் வெளிநாட்டில் இருந்துள்ளார். அப்போது தனுஷ் தான் இங்கிருந்து அனைத்து வேலைகளையும் இழுத்துப்போட்டு செய்துள்ளார். இதனாலேயே இவர்கள் நட்பு இன்னும் அதிகமாக, அது படம் வரை தற்போது வந்துள்ளது, சபாஷ் தனுஷ்.

## சிம்புவுக்கு படப்பிடிப்பில் விபரீதம்



அச்சம் என்பது மடமையடா படத்திற்காக சிம்புவின் ரசிகர்கள் வெயிடிங். நீண்ட இடைவேளைக்கு பிறகு தற்போது படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. தற்போது படத்திற்கான சண்டை காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றனவாம்.

டூப் இல்லாமல் சண்டை காட்சிகள் செய்யும் போது சிம்புவிற்கு மூக்கு மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. கௌதம் மேனன் இயக்கும் இப்படத்தில் சிம்புவிற்கு ஜோடியாக மஞ்சிமா மோகன் நடித்து வருகிறார்.

## போக்கிரி ராஜாவின் தாமதத்திற்குக் காரணம் வெளியானது



புலி படத்தின் தோல்வியால் தான பி.டி.செல்வகுமார் தயாரித்த போக்கிரி ராஜா தள்ளிப்போனதாக கூறப்பட்டது. மேலும், இப்படத்திற்கு ரெட் கார்ட் அளிக்கப்பட்டதாகவும் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால், படக்குழு இதை மறுத்துள்ளது. அடுத்தவாரம் இப்படம் வரவிருந்த நிலையில், இதனுடன் கணிதன், ஆறாவது சினம் வரவிருப்பதால் கண்டிப்பாக வசூல் பிரியும். இதன் காரணமாகவே போக்கிரி ராஜா படத்தை மார்ச் 4ம் திகதி தள்ளி வைத்துள்ளனர்.

## இத்தனை கோடி செலவில் 2.0 பட சண்டை காட்சியா?



ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் 2.0 படம் ரூ.350 கோடி பட்ஜெட்டில் தயாராக இருப்பது நாம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். ரஜினி மற்றும் அக்ஷய் குமார் இடம்பெறும் சண்டை காட்சிகள் முதற்கட்ட படப்பிடிப்பில் நடைபெற்று இருப்பதாக கூறப்படுகிறது. பூந்தமல்லியில் பிரம்மாண்டமான செட்டில் நடைபெற்றிருக்கும் இந்த சண்டை காட்சிகளுக்காக போடப்பட்டிருக்கும் செட் ரூ.20 கோடியாம்.

இப்படத்திற்கான சண்டை காட்சிகளை ஹொலிவுட் சண்டை பயிற்சியாளர் கென்னி பேட்ஸ் செய்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களுக்கு மாணவர்களைப் பயன்படுத்துவது நிறுத்தப்படல் வேண்டும்



உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் மாற்றம் சரியானது என்கின்றார் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா.

கடந்த இரு வாரங்களாக வவுனியாவிலுள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னணியில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனது மகனுடைய உடையினை கத்தரிக்கோல்கொண்டு இவ்வாசிரியர் வெட்டியதன் காரணத்தினால் ரவீந்திரனுடைய மகன் தந்தையிடம் சென்று முறையிட்டதன் அடிப்படையில் அவர் அதிரடி நடவடிக்கையாக உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் அவர்களை வேறுஇடத்திற்கு இடம்மாற்றினார் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் பாடசாலை மாணவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. இதற்கு ஆதரவாக பழைய மாணவர்களும் செயற்பட்டு வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கையில், உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் மாணவன் அணிந்திருந்த ஆடையினை வெட்டிய விடயம் தவறே. ஏற்கனவே இவ்விடயம் தொடர்பான முறைப்பாடுகள் இருக்கின்றன. இவருடைய செயற்பாடானது ஒரு மனித உரிமை மீறலாகவே கருதப்படுகின்றது.

ஏற்கனவே இப்பாடசாலையில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். சுந்தராங்கன் ஆசிரியர் என்பவர் தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் அனுமதி பெற்றவர் அல்ல. அவருடைய அனுமதியானது மாகாண பாடசாலைகளுக்குரிய அனுமதியே. சுற்றுநிருபத்தின் அடிப்படையிலே உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் அவர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த அவர், மாணவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் இல்லை. தமது சொந்த நலன்களுக்காக சிலர் இவ்விடயத்தில் செயற்படுகின்றார்கள் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அன்ரன் சோமராஜா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், சுற்றுநிருபத்தின் அடிப்படையிலே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெற்றோர்களையும், சம்பந்தப்பட்ட மாணவர்களையும் ஒன்றிணைத்து சந்திப்பொன்றினை ஒழுங்குசெய்து இதற்குச் சரியான தீர்வொன்றினை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார்.


மாணவர்களினுடைய நிலைப்பாட்டின்படி அவர்களாகவே முன்வந்து இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்யவில்லை. ஒருசில பழைய மாணவர்களுடைய செயற்பாடுகளே இவ் ஆர்ப்பாட்டத்தில் வெளிப்படுகின்றது. இதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுடைய பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்குச்சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கனின் நடவடிக்கைகள் தவறு என்றும் சுட்டிக்காட்டிய அவர் அரசியல்வாதிகளோ, பொதுமக்களோ மாணவர்களைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டங்களைச் செய்யக்கூடாது. இவ்விடயமானது தனிப்பட்ட ஆசிரியர் சம்பந்தப்பட்டது. அதற்கான குழுவை நியமித்து ஆசிரியர் சங்கத்துடன் கலந்தாலோசித்து இதற்கான சரியான தீர்வுகளை முன்னெடுப்பதே சிறந்தது எனக்கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் பாடசாலையினுடைய அதிபர் மரியநாயகம் அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில், மாணவர்களையோ, ஆசிரியர்களையோ இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நாம் தூண்டவில்லை. அவர்களாகவே முன்வந்து உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் இந்த பாடசாலைக்குத் தேவை என்று கூறி இவ் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்கின்றனர். இது தொடர்பாக நேரடியாகவும், மறைமுகமாகவும் செயலாளர் ரவீந்திரனிடம் பேசியிருக்கின்றேன். உடற்பயிற்சி ஆசிரியர் மாற்றத்திற்கு காரணம் இதுவல்ல. இது சுற்றுநிருபத்தின் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்று குறிப்பிட்ட அவர் குறிப்பிடப்பட்ட சம்பவத்தின்போது இடமாற்றம் செய்யப்பட்டதே மாணவர்களிடையே ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. வெளிப்படையாக உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் செயற்பட்ட விதம் சட்டரீதியாக தவறாக இருக்கின்றபோதிலும், மாணவர்கள் மத்தியில் அது செயலாளர் ரவீந்திரன் அவர்களுடைய மகனுக்கு உடையினை வெட்டியதன் காரணமாகவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஆசிரியரை இடமாற்றம் செய்துள்ளார் என்பது மாணவர்களுடைய குற்றச்சாட்டு. இதன் அடிப்படையிலேயே தொடர்ந்தும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் ஓரிரு தினங்களில் இதற்கான சரியான தீர்வுகளை முன்னெடுப்போம் என்று அவர் எமது செய்தி சேவைக்குத் தெரிவித்தார்.

காலை இடம்பெற்ற மாணவர்களுடைய ஆர்ப்பாட்டமானது பன்னிரண்டு மணியளவில் முடிவிற்கு வந்தது. இருந்தும் இவ் ஆசிரியர் விவகாரம் தொடர்பில் முடிவுகளை எடுக்காத பட்சத்தில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் என மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர். இப் பாடசாலையானது யுத்தத்திற்கு முன்னர் பல்வேறு ஆயுதக்குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழும் குழுநிலை மோதல்களாகவே செயற்பட்டு வந்தது. குறிப்பாக தற்போது இருக்கக்கூடிய அதிபர் மரியநாயகம் அவர்களால் இப்பாடசாலை முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இதனைச் சீர்குலைக்கும் நோக்கில் ஒருசில அரசியல்வாதிகள் சுயலாபம் தேடுவோராக செயற்பட்டு வருவதன் காரணமாக இப்பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. வவுனியாவில்மிகமுக்கியமானபாடசாலைகளில் ஒன்று தான் இந்த தமிழ் மத்திய மகாவித்தியாலயம். உடற்பயிற்சி ஆசிரியர் சுந்தராங்கன் அவர்களும் மாணவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற ஒருவர். அவருக்கு ஆதரவான மாணவர்களும் இருக்கின்றார்கள். சிறியதொரு விடயத்தைப் பாரதூரமாகக்காட்டுவதன் ஊடாக மாணவர்கள் மத்தியில் வன்முறைகளைத் தோற்றுவிக்கும் நிலையே உருவாகும். இதனை எந்த அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, அமைச்சர்களாக இருந்தாலும் சரி உடனடிக் கவனத்திற்கொண்டு மாணவர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இன்றி தமது கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆதரவளிக்கவேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் கல்வியின் ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணனுடன் தொடர்புகொண்டு வினவியபொழுது, இவ்விடயம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஒரு குழுவை அனுப்பி இருவாரங்களுக்குள் அதற்கான தீர்வு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தனிப்பட்ட கோபதாபங்களை பாடசாலை மட்டத்தில் வெளிப்படுத்துவது என்பது தவறான ஒரு செயல். ஆகவே பாடசாலை மாணவர்களின் கல்வியில் நாம் அக்கறைகொண்டு செயற்படுகின்றோம். வன்முறைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து பாடசாலை மாணவர்கள் தமது கல்வியிலேயே கவனம் செலுத்தவேண்டும். அதுவே எமது நிலைப்பாடு. இதற்கான உடனடி நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தினப்புயல் பத்திரிகைக்குத் தெரிவித்தார். தற்போது இப்போராட்டமானது கைவிடப்பட்டிருக்கின்றது. மாணவர்களால் 04நாட்களில் தமக்கான தீர்வினை வழங்கவேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் மீண்டும் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவ்வார்ப்பாட்டம்மாணவர்களது பின்னணியில் இடம்பெறவில்லை என்பது ரவீந்திரனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி அதிகாரிகளது கருத்தின்படி சுந்தராங்கனது இடமாற்றம் சரியானதே என்பதாகும். மனித உரிமை மீறல் செயற்பாட்டையே இவர் செய்துள்ளார். இதற்கும் இவரது இடமாற்றத்திற்கும் தொடர்பில்லை என்பதே இவர்களது நிலைப்பாடாகும். மாணவர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதா? அல்லது செயலாளர் ரவீந்திரனைக் காப்பாற்றுவதா? இந்தப்பொறுப்பை மத்திய அரசே தீர்மானிக்கவேண்டும். மாணவர்களை எதிர்ப்பது என்பது ஒரு தீவிரவாதப்போக்கினை உருவாக்கும் என்பதை உணர்ந்துகொண்டு உயரதிகாரிகள் செயற்பட்டால் நிரந்தரமாகவே மாணவர்களது போராட்டங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். அரசியல்வாதிகளின் தலையீட்டினைத் தவிர்த்து, பாடசாலையின் முன்னேற்றத்திற்காக செயற்படுபவர்களை அழைத்து இதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதே சிறந்தது.



## திடீரெனத் திசை மாறுகின்றது வடக்கு, கிழக்கு வீட்டுத் திட்டம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட 65ஆயிரம் வீட்டுத் திட்டத்தில், தற்போது அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. மீள்குடியேற்ற அமைச்சினால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2.1 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளும் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கே இந்த வீட்டுத்திட்டம் முழுமையாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஜனவரி மாதம் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு பேசிய, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனும், வடக்கு, கிழக்கு மக்களுக்காக 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே திடீரென, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மேலதிகமாக அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம் மாவட்டங்களும் 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று மாவட்டங்களும் போரின் பாதிப்புகளை எதிர்கொண்ட மாவட்டங்களின் அடிப்படையிலேயே இதில் உள்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சம்பூர் கடற்படை முகாம் அப்புறப்படுத்தப்பட உள்ளது

பல்வேறு எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை கவனத்தில் கொள்ளாது சம்பூர் நிலக்கரி அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக சம்பூர் கடற்படை முகாமை அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட உள்ளது. இந்த நிலக்கரி அனல் மின் நிலையம் இந்தியா நிர்மாணிக்க உள்ளதுடன் அதற்காக சுற்றுச்சூழல் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. 500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இந்த மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதால், கடற்படை முகாமை சம்பூருக்கு வெளியில் கொண்டுசெல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுவது சம்பந்தமாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சம்பூர் பிரதேசத்தில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். சம்பூர் அனல் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்க 500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை நிர்மாணிப்பதற்கான செலவு 600 மில்லியன் டொலர்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.


பதுளை மாவட்டம் வெலிமடை பொலிஸ் பிரிவில் பெலுங்கல பிரதேசத்தில் வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். பிற்பகல் நடந்த இந்தச் சம்பவத்தில் வர்த்தக நிலையத்தின் உரிமையாளரே தீயில் கருகி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. பெலுங்கல பொரகஸ்பிரதேசத்தைசேர்ந்த 46வயதான [illegible] பன்சலாகே பிரேமரத்ன என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். வெலிமடை நீதவான் மரண விசாரணைகளை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைகளை பதுளை சட்டவைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார். தீக்காயங்களினால் இந்த மரணம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் வெலிமடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனவர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் தயக்கம் காட்டுவது ஏன்?

யுத்தம் நிறைவடைந்து 06ஆண்டுகளைக் கடந்துள்ளபோதிலும் தமிழ் மக்களது இனப்பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில், இலங்கையின் 68வது சுதந்திர தின வைபவத்தின்போது தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டதுடன் அதுவே தமிழினமும், சிங்கள இனமும் ஒற்றுமையாக வாழ வழி வகுக்கும் என அரசியல்வாதிகளால் கருதப்பட்டுள்ள நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம், போர்க்குற்ற விசாரணைகள், இனப்படுகொலைகள் தொடர்பில் மைத்திரியின் கூட்டரசாங்கம் இரட்டை வேடம் காட்டுகிறது எனலாம்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதற்காக நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் பதவிக்காலமும் நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் காணாமற்போனோருக்கான தீர்வுகள் என்ன? என்கின்ற கேள்விக்குறியும் எழுகின்றது. காணாமற்போனோர் விடயம் சம்பந்தமாக கடந்த காலங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது மட்டுமன்றி அதற்கான தீர்வுத்திட்டத்தை வழங்கும் அளவிற்கு பரணகம ஆணைக்குழு செயற்படவில்லை. மீண்டும் "பழைய குருடி கதவினைத் திறவடி" என்பதற்கிணங்க செயற்படுவது அரசியலுக்கு ஒவ்வாத விடயமாகும்.



ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் பல இருக்கின்றன. இவர்களும் மனித உரிமை ஆணையகம் என்கின்ற போர்வையில் காணாமற்போனவர்களின் பிரதேசங்களுக்குச்சென்று அவர்களின் நிலைமைகளை அறிந்துகொண்டதுடன் ஒட்டுமொத்த அறிக்கைகளையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கிறார்களே தவிர, உடனடி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாணைக்குழுவில் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பவர்களுக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சிலர் இராணுவத்தினரால் அழைக்கப்பட்டு எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலைமைகள் இதுவரை [illegible]லும் மாற்றப்படவில்லை. காணாமற்போனோரின் பட்டியல் மாத்திரம் நீண்டுசெல்கின்றது. முள்ளிவாய்க்காலில் மாத்திரம் 01இலட்சத்திற்கும் அதிகமானோர் இருந்ததாகவும் இதில் 25000 மீள்குடியேற்றங்கள் மாத்திரம் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. மீதமானவர்களின் நிலைமைகள் எதுவும் அறியப்படவில்லை. போரின்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 140,000 என ஐ.நா கூறுகிறது. அரசின் கணக்கின்படி 30,000 மக்கள் மாத்திரமே கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் ஏனையவர்கள் போராளிகள் என்கிறது. இதனது முழுமையான விபரங்கள் எதுவும் இதுவரையில் திரட்டப்படவில்லை. தமிழ் மக்களைப் பிரதிபலிக்கின்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் கூட இவ்விபரங்கள் எதுவும் இல்லை. கடந்த மாதம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, வட-கிழக்கு மாகாண சபைகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்ட கட்சிக் கூட்ட நிகழ்வு கிளிநொச்சியின் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் போன்றோர் காணாமற்போனோர் தொடர்பான விபரங்கள் எம்மிடம் முழுமையாக இல்லை. நீங்கள் தாருங்கள் என காணாமற்போனவர்களின் உறவினர்கள் அன்றைய தினமும் நடாத்திய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது அவர்களிடம் நேரடியாகக் கேட்டனர். யுத்தம் நிறைவடைந்து 06வருடங்களைக் கடந்துவிட்ட நிலையில் யுத்தத்தில் காணாமற்போன மற்றும் கொல்லப்பட்ட மக்களின் விபரங்கள் எதுவும் இதுவரை த.தே.கூட்டமைப்பினரால் முழுமையாக சேகரிக்கப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது. அவ்வாறான விபரங்கள் முழுமையாக திரட்டப்பட்டாலன்றி காணாமற்போனவர்களை கண்டறியும் விடயத்தில் தாமதம் ஏற்பட்டு அது உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் இவ்வாறான சம்பவங்கள் எதுவும் இலங்கையில் இடம்பெறவில்லை என்கிற தீர்ப்பே மிஞ்சும்.

தற்போது இருக்கக்கூடிய தரவின் அடிப்படையில் இறுதி யுத்தத்தில் 140,000 மக்களைக் காணவில்லை என்பதாகும். இது மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கிடைத்த விபரமாகும். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் காணாமற்போனவர்களின் விபரங்கள் எதுவும்முழுமையாகதிரட்டப்படாதநிலையில் எவ்வாறு அதற்கான தீர்வுகளை எட்டமுடியும் என்கின்ற கேள்வி எழுகின்றது.

வடமாகாணசபையின் உறுப்பினர்கள் வடமாகாணத்தில் மாத்திரம் 30க்கும் மேற்பட்டோரும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 17பேர் என்ற அடிப்படையில் அங்கம்வகிக்கின்றார்கள். கிழக்கில் 10க்கும் மேற்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒருவருக்குதலா 2000என்ற அடிப்படையில் விபரங்களைத் திரட்டினாலும் கூட 01இலட்சத்திற்கும் மேற்பட்டோரது விபரங்களைத் திரட்ட முடியும். இனப்படுகொலை இடம்பெற்றதற்கும் யுத்தக்குற்றத்திற்குமான தீர்வினை ஐ.நாவிடமிருந்து தமிழினம் பெறவேண்டுமாகவிருந்தால் வெறுமனே அறிக்கைகளை வாசிப்பது மாத்திரம் போதாது. அதற்கான முழுவிபரங்களும் தேவை.

வீட்டுத்திட்டங்கள் வழங்குகின்றார்கள் என்கின்றபோது 50000இற்கும் மேற்பட்டோர் பதிவு செய்யப்படுகின்றார்கள். மனித உரிமை அமைப்புக்கள், தேசப்பற்றுள்ள இயக்கங்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் வாயிலாக காணாமற்போனவர்களின் விபரங்களைத் திரட்டுவது சுலபம். யுத்தம் நிறைவடைந்து 06வருடங்களைக் கடந்துவிட்டபோதிலும் இவ் வாறான நடவடிக்கைகளை ஏன் செயற்படுத்தவில்லை? தமிழ் அரசியல் வாதிகள் சற்றுச்சிந்திக்கவேண்டும். நல்லாட்சி எனக்கூறிக்கொள்கின்ற அதேநேரம் தமிழ் மக்களுக்கான சலுகைகள் வழங்கப்படும். இன்னும் ஒருவருடத்தில் தீர்வினைப் பெற்றுத்தருவோம் என்றெல்லாம் பேச்சளவில் மாத்திரம் கூறப்படுகின்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் மாத்திரமே பகிரங்கமாக காணாமற்போனவர்களின் எண்ணிக்கையினைத் தெரிவித்திருந்தார். எனினும் அவர் இனி மேலும் சாட்சியங்கள் எதுவும் கூற முடியாதவராக நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். இவ்வெற்றிடத்தை நிரப்புபவர்கள் யார்? அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? என்கிற கேள்வியும் எழுகின்றது. போராட்டம், தமிழ் அரசியற்கைதிகள், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் என எதுவும் இலங்கையில் நிகழவில்லை என்பதை சர்வதேசத்திற்குக் காட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. உலக நாடுகளின் உதவியுடன் தமிழ் மக்களின் ஈழப்போராட்டம் மழுங்கடிக்கப்பட்டது. இதற்கான ஆதாரங்கள் செய்மதியின் வாயிலாகக்கூட ஆவணப்படங்கள் பெறப்பட்டுள்ளன. இலங்கைக்கு இரசாயன ஆயுதங்களை வழங்கிய நாடுகளின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையிலும் கூட தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்படவில்லையெனில் அதற்கான அர்த்தம் என்ன? எதிர்க்கட்சிப்பதவி கிடைத்துவிட்டால் அனைத்தும் கிடைத்துவிடும் என எண்ணுவது தவறு. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அரசு தனது காய்நகர்த்தல்களை எவ்வாறு நகர்த்துகின்றது. இவ்வாறே தமிழ் மக்களுடைய நிலைமைகள் பயணித்துக்கொண்டிருக்குமாகவிருந்தால் மீண்டும் தமிழினம் தவறான பாதைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.


தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் எத்தனையோ தடவைகள் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை மேற்கொண்டனர். ஒவ்வொரு சிறப்புத் தினங்கள் வருகின்றபோது அத்தினங்களில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனப் போலியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அரசியல் கைதிகளும் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வந்த நிலையில் அவர்கள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படமாட்டார்கள் எனவும், சட்டத்தின் மூலமே அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் தற்போது கூறப்படுகின்றது. அரசியற்கைதி ஒருவருக்கு பல வழக்குகள் இருக்கின்றது. இவ்வழக்குகளை விசாரணை செய்த பின்னரே அதற்கான தீர்வுகளை மேற்கொள்ளமுடியும். சர்வதேச சட்டத்தின் படி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய முடியுமே தவிர, ஐ.நா சபைக்கு வலியுறுத்துவதன் ஊடாக இவர்கள் விடுதலை செய்யப்படப்போவதில்லை. அரசியல் கைதிகளின் விடுதலைக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரே. தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகள் என்கின்ற வகையில் இதுவரையில் இவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. காணாமற்போனோர் விவகாரம் ஒருபுறமிருக்க, உயிருடன் இருக்கின்ற அரசியல் கைதிகளையாவது விடுதலை செய்வதற்கான வழிவகைகளை இவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா? என்கின்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. 30 வருடங்கள் இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களே இவர்கள். எமது அரசியல் தலைமைகள் பல்வேறான தவறுகளைச் செய்ததன் காரணமாகவே இவர்கள் ஆயுதமேந்திப்போராட வேண்டிய தேவை ஏற்பட்டது. அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சர்வதேசம் தலையிடாது என ஐ.நா மனித உரிமைப்பேரவையின் ஆணையாளர் தெரிவித்த கருத்தானது சர்வதேசம் தொடர்பாக எதிர்பார்ப்புடன் இருந்த அரசியல் கைதிகளுக்கு தலையில் இடிவிழுந்தது போன்றதாக மாறியுள்ளது.

இந்த விடுதலைப்போராட்ட வீரர்களை பயங்கரவாதிகள் எனச் சித்தரிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தேர்தல் காலங்களில் மாத்திரம் அரசியல்வாதிகளை வீதிகளில் காணமுடிகிறதே தவிர, தற்போது அவர்கள் அனைவரும் தமது சுய அரசியலை நடாத்தி வருவதையே அவதானிக்க முடிகிறது. ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது எனக் கூறிக்கொள்ளும் அதேநேரம் கடந்த காலங்களில் இந்நாட்டில் கலவரங்களைத் தோற்றுவித்த ஜேவிபியினருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு அரசியலுடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்றால் ஏன் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய இந்தப்போராளிகளுக்கும் பொதுமன்னிப்பினை வழங்கி அவர்களை விடுதலை செய்ய முடியாது. இதில் யார் பக்கம் தவறு இருக்கிறது என்பதே கேள்வி. தமிழினத்தின் விடுதலைக்காக குரல் கொடுப்போம் என்கிறவர்கள் இந்த அரசியல் கைதிகளின் விடுதலையிலும் கவனம் செலுத்தவேண்டும். வெறுமனே பாராளுமன்ற கதிரைகளை நிரப்புவதற்காக மாத்திரமே இவர்களின் அரசியல் இருந்துவிடக்கூடாது. அன்று தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி போன்றவர்களால் போராட்டம் தூண்டி விடப்பட்டது. உணர்ச்சிகள் கலந்த வார்த்தைப்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டது. இதனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப்போராட முன்வந்தனர். தமிழினம் அழிக்கப்பட்ட வரலாறுகளைப்பார்த்த இந்தப் போராளிகள் 50000இற்கும் மேற்பட்டோர் இனவிடுதலைக்காக இம்மண்ணில் மாவீரர்களாயினர். இவ்வாறான போராட்ட வீரர்களின் தியாகங்களும் மதிக்கப்படவேண்டியவை. இவ்வரசியல் கைதிகள் உண்ணாவிரதம் என இருக்கின்ற நேரங்களில் மாத்திரம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மற்றும் மாகாணசபையின் உறுப்பினர்கள் என ஊடகங்களை அழைத்து பரபரப்பான செவ்விகளும், பசப்பு வார்த்தைகளும், வீரவசனங்களும் பேசப்படுகின்றதே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா? என்கின்ற கேள்விக்கான பதில் இல்லை.


நல்லாட்சி எனக்கூறிக்கொள்ளும் இந்த ஆட்சியில் சிறந்த விடயங்கள் நடைபெறவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. காலத்திற்குக்காலம் இலங்கை அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமிழினத்திற்கு துரோகமே செய்தன. இவ்வரசாங்கமும் அதனையே செய்ய முற்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் மாற்றப்படவேண்டும். தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு என்பது விரைவில் எட்டப்படவேண்டும். அதுவே நல்லாட்சி என்பதற்கு உதாரணமாக அமையும். இல்லாவிடில் மீண்டும் ஒரு பிரிவினைவாத யுத்தத்தை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும் எனலாம்.

- மறவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்





## விவேகானந்தரின் சிந்தனைகள்

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச்செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்.

அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்.

எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன். பலமே வாழ்வு, பலவீனமே மரணம்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத்தேவை.

உடல்பலவீனத்தையோ,மனபலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக்கூடாது.

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக ரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத்மாக்களே.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

அளவற்ற பலமும் பெண்ணைப்போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன்.

உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும், பிரம்மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை லட்சியங்களாக நமக்குத்தேவைப் படுகின்றன.

கல்வி என்பது மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணம் ஆகாமல் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அனைத்து தேவைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.

நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும். உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத்தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.

மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது தான் மதத்தின் முழுப்பரிமாணமாகும்.

ஒருவன் தன்னை வெறுக்கத் துவங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்.

எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தன் விருப்பத்திற்குஏற்றதாகமாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையைச் செய்வதால், நமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப்போகிறது

நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும்.

## நபிமொழிகள்

நான், 'இறைத்தூதர் அவர்களே! நான் (இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு) அறியாமைக் காலத்தில் உறவைப் பேணுதல், அடிமைகளை விடுதலை செய்தல், தானதர்மம் செய்தல் ஆகிய நற்செயல்களைப் புரிந்துள்ளேன். அவற்றுக்கு (மறுமையில்) எனக்கு நற்பலன் ஏதும் உண்டா? கூறுங்கள்!' என்று கேட்டேன். அதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'நீர் முன்னர் செய்த நற்செயல்(களுக்குரிய நற்பலன்)களுடனேயே இஸ்லாத்தைத் தழுவியுள்ளீர்' என்று பதிலளித்தார்கள்.
அறிவிப்பாளர் : ஹகீம் இப்னு ஹிஸாம்(ரலி) .
ஆதாரம்: புகாரி.

ஹிந்த் பின்த்து உத்பா(ரலி), நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! (என் கணவர்) அபூ சுஃப்யான் மிகவும் கருமியாக இருக்கிறார்.அவரின் பணத்திலிருந்து (அவருக்குத் தெரியாமல் எடுத்து) எங்கள் குழந்தைகளுக்கு உணவளிப்பதால் என் மீது குற்றம் ஏதும் உண்டா?' என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நியாயமான அளவிற்கு (உன் கணவனின் பணத்தை எடுத்து) அவர்களுக்கு உணவளிப்பதால் உன் மீது குற்றம் எதுவும் இல்லை' என்று பதிலளித்தார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி).
ஆதாரம்: புகாரி.

"நீங்கள் சாலையில் அமர்வதைத் தவிருங்கள்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள், 'எங்களுக்கு அங்கு அமர்வதைத் தவிர வேறு வழியில்லை அவைதாம், நாங்கள் பேசிக் கொள்கிற எங்கள் சபைகள்' என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள், 'அப்படியென்றால் நீங்கள் அந்தச் சபைகளுக்கு வ(ந்து அம)ரும்போது, பாதைக்கு அதன் உரிமையைக்கொடுத்து விடுங்கள்' என்று கூறினார்கள். மக்கள், 'பாதையின் உரிமை என்ன? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், '(அந்நியப் பெண்களைப் பார்க்காமல்) பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும், (பாதையில் செல்வோருக்குச் சொல்லாலோ செயலாலோ) துன்பம் தராமலிருப்பதும், சலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியும்படி கட்டளையிடுவதும், தீமையிலிருந்து தடுப்பதும் (அதன் உரிமைகள்) ஆகும்' என்று பதிலளித்தார்கள்.
அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி).
ஆதாரம்: புகாரி.

நபி(ஸல்) அவர்களின் காலத்தில் (அவர்களின் மகன்) இப்ராஹீம்(ரலி) மரணித்த அன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. இப்ராஹீமின் மரணத்திற்காகவே சூரிய கிரகணம் ஏற்பட்டதாக மக்கள் பேசிக்கொண்டனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'சூரியனுக்கும் சந்திரனுக்கும் எவருடைய மரணத்திற்காகவோ எவருடைய வாழ்வுக்காகவோ கிரகணம் பிடிப்பதில்லை. எனவே நீங்கள் (கிரகணத்தைக்) கண்டால் தொழுது அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கூறினார்கள்.
அறிவிப்பவர்: முகீரா இப்னு உபா(ரலி).
ஆதாரம்: புகாரி.

"ஓர் இறைநம்பிக்கையுடைய கணவன் தன் இறைநம்பிக்கையுடைய மனைவியை வெறுக்க வேண்டாம். அவளுடைய ஒரு பழக்கம் அவனுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவளுடைய வேறு பழக்கங்கள் அவனுக்கு மனநிறைவு அளிக்கக்கூடும்"- நபி (ஸல்)
அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா (ரலி)
நூல்: முஸ்லிம்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் "பசித்தவருக்கு உணவளியுங்கள் நோயாளியை(ச் சந்தித்து) உடல் நலம் விசாரியுங்கள் (போர்க்) கைதியை (எதிரியிடமிருந்து விடுவியுங்கள்)"
அறிவிப்பாளர் : அபூ மூஸா அல்அஷ்அரீ(ரலி)
ஆதாரம்: புகாரி.

"(ஒருமுறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?' என்று மூன்று முறை கேட்டார்கள். நாங்கள், 'ஆம், இறைத்தூதர் அவர்களே! (அறிவியுங்கள்)' என்று கூறினோம். நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வுக்கு இணை வைப்பதும், பெற்றோரைப் புண்படுத்துவதும்' என்று சொல்லிவிட்டு சாய்ந்துகொண்டிருந்த அவர்கள் எழுந்து அமர்ந்து, 'அறிந்து கொள்ளுங்கள்: பொய் பேசுவதும், பொய் சாட்சியமும் (மிகப்பெரும் பாவம்தான்) பொய் பேசுவதும் பொய் சாட்சியமும் (மிகப்பெரும் பாவம்தான்)' என்று கூறினார்கள். இதை அவர்கள் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். (இதைக்கண்ட) நான் 'அவர்கள் நிறுத்திக்கொள்ளக் கூ[illegible]ா?' என்றேன். அறிவிப்பவர்: அபூ பக்ரா நுஃபைஉ இப்னு ஹாரிஸ் (ரலி)
ஆதாரம்: புகாரி.

## நற்சிந்தனைகள்

பேசும்முன் கேளுங்கள் எழுதும்முன் யோசியுங்கள் செலவழிக்கும்முன் சம்பாதியுங்கள். சிலவேளைகளில் இழப்புதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.

யாரிடம் கற்கிறோமோ அவரே நம் ஆசிரியர். கற்றுக்கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.

நாம் மாறும்போது தானும் மாறி, நாம் தலையசைக்கும்போது தானும் தலையசைக்கும் நண்பன் நமக்குத் தேவையில்லை. அதற்கு நம் நிழலே போதும்.

நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும். நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.

நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்!

வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

சமையல் சரியாக அமையாவிடில் ஒருநாள் இழப்பு, அறுவடை சிறக்காவிடில் ஓராண்டு இழப்பு, திருமணம் பொருந்தாவிடில் வாழ்நாளே இழப்பு, முழுமையானவன் இன்னும் பிறக்கவில்லை, இனியும் பிறக்க மாட்டான்.

பரபரத்துஓடுவதில்பயனில்லை.உரியநேரத்தில் புறப்படுங்கள். எல்லோரையும் நேசிப்பது சிரமம்தான் ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.

நல்லவர்களோடு நட்பாயிருங்கள் நீங்களும் நல்லவனாகலாம்.

காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால் கோபத்தின் காரணம் பெரும்பாலும் நல்லதாய் இருப்பதில்லை.

விந்தையான சிலரைப் பார்க்கும்போது இவர்கள் ஏன் இப்படி? என்பதைவிட, இவர்கள் இப்படித்தான் என எண்ணிக்கொள்ளுங்கள்.

யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.

ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை முடிவெடுங்கள். அச்சம்தான் நம்மை அச்சுறுத்துகிறது. அச்சத்தை அப்புறப் படுத்துவோம்.

நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக எவருடனும் விவாதிப்பது சிறப்பாகும். உண்மை புறப்பட ஆரம்பிக்கும்முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும். உண்மை தனியாகச் செல்லும் பொய்க்குத்தான் துணை வேண்டும். வாழ்வதும் வாழவிடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உலகம்

## 103 மொழிகளை மொழிமாற்றம் செய்கிறது Google Translater




மொழிமாற்றம் செய்யப்பயன்படும் Google Translaterஇல் புதிதாக 13 மொழிகள் இணைக்கப்பட்டுள்ளன என்று கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது 13 மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளதால், மொத்தம் 103 மொழிகளை மொழிமாற்றம் செய்வதற்கு Google Translater பயன்படுகிறது. இதுகுறித்து கூகுள் நிறுவனத்தின் Senior Program Manager கூறியதாவது. கூகுள் இயந்திரத்தின் மூலம் மக்கள் புதிய மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

அதிகமான வரிகளை மொழிமாற்றம் செய்வதற்கு சில பிரச்சினைகள் இருந்துவந்தது. ஆனால் தற்போது அதனை சரிசெய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 3 மில்லியன் மக்களிடம் இருந்து 200 மில்லியன் வார்த்தைகளை மொழிமாற்றம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதிதாக இணைக்கப்பட்டுள்ள மொழிகள்: Amharic, Corsican, Frisian, Kyrgyz, Hawaiian, Kurdish (Kurmanji), Luxembourgish, Samoan, Scots Gaelic, Shona, Sindhi, Pashto மற்றும் Xhosa.

## Huawei அறிமுகம் செய்யும் புத்தம் புதிய MediaPad T2



மொபைல் சாதன உற்பத்தியில் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் நிறுவனங்களுள் ஒன்றான Huawei ஆனது MediaPad T2 எனும் புத்தம் புதிய மொபைல் சாதனத்தை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இச்சாதனமானது 10.1 அங்குல அளவுடையதும், 1902 x 1080 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் Qualcomm Snapdragon 615 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவை தவிர Android 5.1 Lollipop இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், நீடித்து உழைக்கக்கூடிய 6660 mAh மின்கலம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் இதில் காணப்படும் கெமராக்களின் வினைத்திறன் மற்றும் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.


## Outlook இன் புதிய பதிப்பில் அதிரடி வசதி




மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் முன்னணி மின்னஞ்சல் சேவையான Outlook இற்கான மொபைல் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. iOS, Android, மற்றும் Windows 10 ஆகிய இயங்குதளங்களைக்கொண்ட மொபைல் சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இப்புதிய பதிப்பில் அனிமேஷன்களைக்கொண்ட பகை கோப்புக்களையும் இணைத்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இலகுவாக கையாளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை Office 365 அப்பிளிக்கேஷனைப் பயன்படுத்துபவர்களுக்கு பெரிதும் பயன்தரக்கூடிய புதிய சில வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

## உணவு டெலிவரி சேவையை வழங்கத் தயாராகும் கூகுள்



இணைய உலகில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் கூகுள் நிறுவனம் மேலும் பல்வேறு சேவைகளை தனது பயனர்களுக்கு வழங்கிவருவது அறிந்ததே. இந்நிலையில் உடனடி உணவுகளை டெலிவரி செய்யும் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் முதற்கட்டமாக மளிகை பொருட்களை குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுமே டெலிவரி செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் டெலிவரி சேவையினை வழங்கிவரும் மற்றுமொரு பிரபல நிறுவனமான அமேசான் ஆனது அண்மையில் தனது டெலிவரி கட்டணத்தை அதிகரித்துள்ள நிலையில் கூகுளின் இப்புதிய முயற்சி அந் நிறுவனத்திற்கு போட்டியாக இருக்கும் எனவும், கட்டணங்கள் குறைவாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.


## மீள்தன்மை கொண்ட தொடுதிரை அறிமுகம்



கனடாவிலுள்ள குயீன்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்து மீள் தன்மை கொண்ட நவீன தொடுதிரையின் மாதிரி ஒன்றினை உருவாக்கியுள்ளனர். எதிர்கால ஸ்மார்ட் கைப்பேசிகளில் பயன்படுத்தவுள்ள ReFlex எனும் இத்தொடுதிரையானது LG நிறுவனத்தினால் ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட 720 Pixel கொண்ட OLED மீள்தன்மை உடைய திரையினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஸ்மார்ட் கைப்பேசியின் தடிப்பினை மேலும் குறைக்க முடிவதுடன், அவற்றில் கீறல்கள், உடைவு ஏற்படுவதனையும் தடுக்க முடியும் என குறிப்பிட்டுள்ளனர். எனினும் இவ்வகை தொடுதிரைகளைக்கொண்ட கைப்பேசிகள் அறிமுகம் ஆனதன் பின்னரே அவற்றிற்குரிய வரவேற்பு எவ்வாறு இருக்கும் என்பதை அறிய முடியும்.

## Gear S2 Classic Smart watch அறிமுகம்



சம்சுங் நிறுவனம் Gear S2 Clasšic என்ற Cellular Smart watchஇனை மார்ச் மாதம் 11ஆம் திகதி சந்தையில் அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. 1.2 இன்ச் வட்டவடிவ AMOLED மொடல் தொடுதிரை இடம்பெறுகிறது. Dual core 1GHz ப்ரோசசர், மேலும் இதன் 300mAh பேட்டரி திறன் மூலம் இயக்கப்படுகிறது. Tizen இயங்குதளம். சேமிப்பு வதிசயாக 4GB மற்றும் நினைவகம் 512MB வதிசயுடன் வருகிறது. ஆனால், இதன் விலை குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

## 40 வயதில் கர்ப்பமானால் மாரடைப்பு ஏற்படும் ஆபத்து



பெண்கள் 40 அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் கர்ப்பமானால், அவர்களுக்கு எதிர்காலத்தில் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளிட்ட உயிரை பறிக்கும் நோய்கள் உருவாகும் ஆபத்து உள்ளதாக பிரித்தானிய மருத்துவர்கள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர். அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள 'American Stroke Association' என்ற அமைப்பின் சார்பில் மருத்துவம் தொடர்பான ஆய்வு கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த ஆய்வுகூட்டத்தில்பிரித்தானியாவை சேர்ந்த மருத்துவக் குழுவினர் பங்கேற்று பெண்கள் கர்ப்பமாவதால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து ஆய்வறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். இதில் சராசரி வயதுடைய, அதாவது இளம் பெண்கள் கர்ப்பமாகும் வயதை விட 40 அல்லது அதற்கு மேல் வயதுடைய பெண்கள் கர்ப்பமானால், அவர்களுக்கு பக்கவாதம், மாரடைப்பு மற்றும் இதயம் தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவைச் சேர்ந்த 72,000 பெண்களிடம் இந்த ஆய்வு குறித்து தகவல் சேகரிக்கப்பட்டது. இவர்களில், 3,300 பெண்கள் 40 வயதிற்கு மேல் கர்ப்பமானதாக கூறியுள்ளனர். இவர்களில் இளைய வயது கர்ப்பிணி பெண்களுக்கு 2.4 சதவிகிதத்தில் பக்கவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், 40 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு 3.8 சதவிகித பக்கவாதம் ஏற்படும் ஆபத்து உள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேசமயம், இளம் வயது கர்ப்பிணி பெண்களுக்கு 2.5 சதவிகித மாரடைப்பும், 40 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு 3.0 சதவிகித மாரடைப்பு ஏற்படும் வாய்ப்புள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இதயம் தொடர்பிலான நோய் குறித்தான ஆய்வில், இளம் வயதினருக்கு 2.3 சதவிகித நோய்களும், 40 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு 3.9 சதவிகித நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் கடந்த 2014ம் ஆண்டில் மட்டும் 4 சதவிகித குழந்தைகள் 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு பிறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சாதம் வடிச்ச கஞ்சி தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்



சாதத்தை குக்கரில் சமைத்து சாப்பிடுவதை விட, வடித்த சாதம் சாப்பிடுவது தான் நல்லது. அதுமட்டுமன்றி அப்படி வடித்த சாதத்தின் போது வடிகட்டிய நீரில் சத்துக்கள் அதிகமாக நிறைந்துள்ளது. சொல்லப்போனால் சாதத்தை விட, அந்த நீரில் அதிக சத்துக்கள் நிறைந்துள்ளது எனலாம்.

சாதம் வடித்த கஞ்சி தண்ணீரைக் குடித்தால், உடலின் ஆற்றல் தக்க வைக்கப்படும். சாதம் வடித்த கஞ்சி தண்ணீர் இரைப்பைக் குடல் அழற்சியைத் தடுக்கும். ஆகவே அவ்வப்போது சாதம் வடித்த கஞ்சி தண்ணீரைக் குடித்து வாருங்கள். சாதம் வடித்த கஞ்சி தண்ணீர் உடலின் வெப்பநிலையை சீராக பராமரிக்க உதவும்.

வடிச்ச கஞ்சி தண்ணீர் ஒருசில புற்றுநோயின் வளர்ச்சியைத் தடுக்கும் திறன் கொண்டவை. ஆகவே புற்றுநோய் உள்ளவர்கள் இதனை குடித்து வந்தால், புற்றுநோயின் வளர்ச்சியைத் தடுக்கலாம். சாதம் வடித்த கஞ்சித் தண்ணீர் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும். எப்போது நீங்கள் மலச்சிக்கலால் அவஸ்தைப்படுகிறீர்களோ, அப்போது ஒரு டம்ளர் சாதம் வடித்த கஞ்சி தண்ணீரைக் குடித்தால் உடனடி நிவாரணம் கிடைக்கும்.

சாதம் வடித்த கஞ்சி தண்ணீரில் கார்போஹைட்ரேட் வளமையாக நிறைந்துள்ளது. ஆகவே உடல் எடையை அதிகரிக்க நினைப்போர் சாதம் வடித்த கஞ்சி தண்ணீரை தினமும் குடித்து வந்தால், நல்ல மாற்றத்தை விரைவில் காணலாம். சாதம் வடித்த கஞ்சி தண்ணீரில் உள்ள ஓரிசனோல் என்னும் பொருள், சூரியனின் புறஊதாக் கதிர்களில் இருந்து நல்ல பாதுகாப்பு தரும்.

## மார்ச் 18ஆம் திகதி சந்தைக்கு வருகிறது iPhone 5SE

வாடிக்கையாளர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை [illegible] அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் 5Se மொடல் மார்ச் 18ஆம் திகதி விற்பனைக்கு வரவுள்ளது. அப்பிள் நிறுவனம் தனது புதிய படைப்பிற்கு ஐபோன் 5Se (Special edition) என்று பெயரிட்டுள்ளது. 4இன்ச் தொடுதிரை வசதியுடன் தயாரிக்கப்பட்டுள்ள இது, ஐபோன் 6 போன்று வட்ட வடிவ முனைகளைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முந்தைய ஐபோன் 5 மொடலின் வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ள இதில் 6 மற்றும் 6S மொடல்களின் சில அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன. 8 MP முன்புற கெமரா 1.2 MP பின்புற கெமரா [illegible] வசதிகள் இதில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.


சில்வர், ஸ்பேஸ் கிரே, ரோஸ் கோல்ட் நிறங்களில் இது கிடைக்கும். இதனுடன், ஐபேட் Air3 ஆகியவையும் மார்ச் 19 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஐபேட் Air3ல் புதிய அம்சங்களாக smart accessories மற்றும் புதிய key board, மேலும் அப்பிள் பென்சிலையும் இந்த ஐபேடில் பயன்படுத்தலாம். 0.05mm தடிமன் மற்றும் 0.1mm பரந்த அளவும் உள்ளன. மேலும் இதில், அப்பிள் 9X ப்ரோசசர், அதிக சேமிப்பு வசதி கொண்ட RAM, மேம்படுத்தப்பட்ட கெமரா வசதிகளைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## டி20 உலகக் கிண்ணத்தொடர் - அணிகளின் முழு விபரம்



ஐசிசி டி20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு மார்ச் 8ம் திகதி முதல் ஏப்ரல் 3ம் திகதி வரை இந்தியாவில் நடைபெறுகிறது. இந்தத் தொடரில் 16 அணிகள் கலந்துகொள்கின்றன. மொத்தம் 35 ஆட்டங்கள் நடைபெறுகிறது. பெங்களூர், தர்மசாலா, கொல்கத்தா, டெல்லி, மும்பை,- நாக்பூர், மொகாலி ஆகிய நகரங்களில் போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்தத் தொடரின் மொத்த பரிசுத்தொகை சுமார் ரூ.37 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 84 சதவீதம் அதிகமாகும்.

இந்தியா
டோனி(அணித்தலைவர்), ரோஹித் சர்மா, ஷிகர் தவான், விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரகானே, ரவீந்தர் ஜடேஜா, ஹர்திக் பாண்டயா, அஷ்வின், ஹர்பஜன் சிங், பும்ரா, நெஹ்ரா, பவான் நெஹி, முகமது சமி.

பாகிஸ்தான்
ஷாகித் அப்ரிடி (அணித்தலைவர்), முகமது ஹபீஸ், சோயிப் மாலிக், முகமது இர்பான், ரம்மன் ரயீஸ், வஹாப் ரியாஸ், பாபர் அசாம், இப்திகார் அகமது, முகமது ஆமீர், உமர் அக்மல், சர்பாஸ் அகமது, இமாத் வாசிம், அன்வர் அலி, குர்ரம் மன்சூர்.

அவுஸ்திரேலியா
ஸ்டீவ் ஸ்மித் (அணித்தலைவர்), டேவிட் வோர்னர், ஆரோன் பிஞ்ச், வொட்சன், மெக்ஸ்வெல், மிட்செல் மார்ஷ், ஆஸ்டன் அகர், உஸ்மான் குவாஜா, பீட்டர் நெவல், பல்க்னெர், ஹாஸ்டிங்ஸ், நாதன் கோல்ட்டர், ஹாசல்வுட், அண்ட்ரூ டை, ஆடம் ஜம்பா.

நியூசிலாந்து
கேன் வில்லியம்சன்(அணித்தலைவர்), கோரி அண்டர்சன், ட்ரெண்ட் போல்ட், கிராண்ட் எலியட், மார்டின் கப்டில், அடம் மிலன், மிட்செல் மெக்லெகன், கொலின் முன்ரோ, நதன் மக்கலம், ஹென்ரி நிகலொஸ், லூக் ரொஞ்சி, மிட்செல் சண்ட்டர், சோதி, டிம் சௌதி, ரோஸ் டெய்லர்.

இலங்கை
லசித் மலிங்கா (அணித்தலைவர்), ஆஞ்சேலோ மேத்யூஸ், தினேஷ் சந்திமால், தில்ஷான், நிரோஷன் டிக்வெல்லா, ஷேகன் ஜெயசூரியா, மிலிந்த சிறீவதனா, தாசுன் ஷனகா, சமரா கபுகேதரா, நுவான் குலசேகரா, துஷ்மந்த் சமீரா, திசர பெரேரா, சசித்ர சேனநாயக, ஹெராத், ஜெஃப்ரி வாண்டர்சே.

தென் ஆபிரிக்கா
டுபிளெஸ்ஸி(அணித்தலைவர்), கைல் அபாட், ஆசிம் ஆம்லா, பெஹர்டீன், குயிண்டன் டி காக், டிவில்லியர்ஸ், டுமினி, இம்ரான் தாஹிர், டேவிட் மில்லர், கிறிஸ் மோரிஸ், ஆரோன் பாஞ்சியோ, காகிசோ ரபாடா, ரசோவ், டேல் ஸ்டெயின், டேவிட் வைஸ்.

மேற்கிந்திய தீவுகள்
டேரன் சமி(அணித் தலைவர்), சுலைமான் பென், ஜேசன் ஹோல்டர், ஆன்ட்ரே பிளெட்சர், டுவைன் பிராவோ, சாமுவேல் பத்ரி, லெண்ட் சிம்மொன்ஸ், ஜெரோம் டெய்லர், ஆன்ட்ரே ரஸல், மார்லான் சாமுவெல்ஸ், தினேஷ் ராம்தின், கிறிஸ் கெயில், ஆஷ்லே நர்ஸ், கார்லோஸ் பிராத்வெயிட்.

இங்கிலாந்து
இயான் மோர்கன் (அணித்தலைவர்), மொயீன் அலி, சாம் பைலிங்ஸ், ஜோஸ் பட்லர், லியாம் டாசன், ஸ்டீவன் ஃபின், அலெக்ஸ் ஹால்ஸ், கிறிஸ் ஜோர்டான், அடில் ரஷீத், ஜோ ரூட், ஜேசன் ரொய், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லீ, ஜேம்ஸ் வின்சென்ட், டேவிட் வில்லி.

## புதிய வரலாறு! படைத்தார் மெஸ்ஸி



ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் தலைவர் லியோனல் மெஸ்ஸி கிளப் போட்டிகளில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். ஆர்ஜென்டினா கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி, ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். இந்நிலையில் ஸ்பெயினின் லா லிகா போட்டியில் ஸ்போர்ட்டின் கிஜோன் அணிக்கு எதிராக அவர் 2 கோல்கள் அடித்தார். இதன் மூலம் அவர் லா லிகா போட்டியில் 300 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

இந்த பட்டியலில் மறைந்த ஸ்பெயின் வீரர் டெல்மோ ஜாரா (251 கோல்கள்), போர்த்துக்கல் அணியின் ரொனால்டோ (246 கோல்கள்) அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். லா லிகா போட்டியில் 334 ஆட்டத்தில் விளையாடியுள்ள மெஸ்ஸி மொத்தமாக 301 கோல்கள் அடித்துள்ளார்.

## சர்வதேச போட்டிகளில் இருந்து சயீத் அஜ்மல் ஓய்வு



திறமையுடன் செயற்பட முடியவில்லை எனில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவேன் என பாகிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் சயீத் அஜ்மல் தெரிவித்துள்ளார். சந்தேகத்திற்கு உரிய வகையில்பந்துவீசுவதாககூறிபாகிஸதான் சுழற்பந்துவீச்சாளரான சயீத் அஜ்மலுக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப்போட்டி துவங்குவதற்கு ஒருவார காலம் இருக்கும்போது தடையை நீக்கினர்.

ஆனால் சர்வதேச போட்டிகளில் அனைவரும் எதிர்கொள்ள அச்சப்படும் தனது பழைய பந்துவீச்சை கொண்டுவர அவர் கடுமையாக போராட வேண்டி வந்தது. இதனிடையே அவர் ஓப் ஸ்பின் பந்துவீச்சில் புதிய உத்தியை பயிற்சி செய்து சர்வதேச போட்டிகளில் விளையாடத் தயாராகியுள்ளார். இந்த புதிய உத்தி தமக்கு கைகொடுக்கவில்லை எனில் சர்வதேச போட்டிகளில் இருந்து தாம் விலக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மலிங்க தலைமையிலான இலங்கை அணி அறிவிப்பு



ஆசியக்கிண்ணம் மற்றும் டி20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இலங்க்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆசியக்கிண்ண டி20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும்24ம்திகதிதொடங்குகிறது.அதேபோல் டி20 உலகக்கிண்ணப்போட்டிகள் மார்ச் 8ம் திகதி தொடங்குகிறது. இவ்விரு போட்டி தொடர்களில் பங்கேற்கும் வீரர்களை இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாட்டு கிரிக்கெட் வாரியங்கள் அறிவித்துவிட்டன. ஆனால் இலங்கை மட்டும் அறிவிக்காமல் இருந்தது. இந்நிலையில் லசித் மலிங்க தலைமையிலான இலங்கை அணியை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இதில் காயத்தால் அவதிப்பட்ட பல [illegible]யர் வீரர்களுக்கு மீண்டும் இடம் கிடைத்துள்ளது.

**இலங்கை அணி வீரர்கள் விபரம்:-**
லசித் மலிங்க (அணித்தலைவர்), அஞ்சலோ மேத்யூஸ், தினேஷ் சந்திமால், திலகரத்னே டில்ஷான், நிரோசன்டிக்வெல்லா, ஷீகன்ஜெயசூர்யா, மிலிண்டா சிறிவர்த்தனா, தசுன் சனகா, சமரா கப்புகெதரா, நுவான் குலசேகரா, துஷ்மந்தா சமீரா, திசர பெரேரா, சசித்ரா சேனநாயகே, ரங்கனா ஹேரத், ஜெப்ரி வன்டர்சே.

## சாதனை படைத்த 'இந்திய கிரிக்கெட்டின் கடவுள்'



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் ஓய்வுபெற்ற பிறகும் சாதனை படைத்துள்ளார். இந்திய கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் "Playing It My Way" என்ற சுயசரிதை புத்தகத்தை எழுதியுள்ளார். 416 பக்கங்களைக் கொண்டதாக உருவான இந்த புத்தகம் கடந்த 2014ம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியானது.

ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று இதுவரையிலும் 1,50,289 புத்தகங்கள் விற்பனையாகியுள்ளது. இதனைத்தொடர்ந்து இந்தியாவில் இருந்து வெளியாகும் லிம்கா புக் ஒப் ரெக்கார்ட்ஸில் இடம்பிடித்துள்ளது.

## பிணைக்கு மறுப்பு தெரிவித்த பாகிஸ்தான் நீதிமன்றம்



தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் கோஹ்லி ரசிகரின் பிணை கோரிக்கையை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது பாகிஸ்தான் நீதிமன்றம். பாகிஸ்தானில் சொந்த வீட்டின் மேலே இந்தியதேசியக் கொடியை ஏற்றிய குற்றத்திற்காக் விராட் கோஹ்லியின் தீவிர ரசிகருக்கு 10 ஆண்டுகள் சிறை விதித்துள்ளது அந்த நாட்டு நீதிமன்றம். தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிசாரின் கருத்துக்களையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை என கூறப்படுகிறது. இதனையடுத்து இந்த வழக்கு தொடர்பாக அமர்வுநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் குடியிருந்து வருபவர் 22 வயதான உமர் டரஸ். இந்திய அதிரடி நாயகன் விராட் கோஹ்லியின் தீவிர விசிறி அவர். அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக இந்திய அணியின் வெற்றியை கொண்டாடும் வகையில் உமர் இந்திய தேசியக்கொடியை ஏற்றியதாக கூறப்படுகிறது. துடுப்பாட்டத்தின் மீதான ஈடுபாடும் விராட் கோஹ்லியின் தீவிர விசிறியாக இருப்பதால் மட்டுமே தாம் இந்திய தேசியக்கொடியை ஏற்றியுள்ளதாக உமர் தெரிவித்துள்ளார். இதனிடையே சமூக ஆர்வலர்கள் சிலர் உமருக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர். இருப்பினும் நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது என்றனர்.

## நடுவரை சரமாரியாக சுட்டுக்கொன்ற கால்பந்து வீரர்



ஆர்ஜென்டினாவில் கால்பந்து போட்டி ஒன்றில் சிவப்பு அட்டை காட்டியதால் நடுவரை கால்பந்து வீரர் சுட்டுக்கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆர்ஜென்டினாவில் உள்ள கோர்டோபா மாகாணத்தில் உள்ளூர் அணிகள் மோதிய கால்பந்து போட்டி நடந்தது. இந்தப் போட்டியில் ஒரு வீரர் எதிர் அணி வீரரிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதால் அவருக்கு நடுவர் சிவப்பு அட்டை காட்டி அவரை மைதானத்தைவிட்டு வெளியேற்றினார். இதனால் ஆத்திரம் அடைந்த அந்த வீரர், தனது காரில் இருந்த பையில் இருந்து துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மைதானத்தில் இருந்த நடுவரை சரமாரியாக சுட்டுள்ளார். இதில் நடுவரின் தலை, கழுத்து, மார்பு பகுதியில் குண்டு பாய்ந்தது.

மேலும், வீரர் ஒருவரின் மீதும் குண்டு பாய்ந்துள்ளது. இதனால் ரசிகர்களும், மற்ற வீரர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயினர். துப்பாக்கி சூடு நடத்திய வீரர் உடனடியாக அங்கிருந்து ஓடிவிட்டார். ரத்த வெள்ளத்தில் கிடந்த நடுவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மற்றொரு வீரர் காயத்துடன் உயிர்தப்பினார். மைதானத்தில் வீரர் ஒருவரால் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கி சூடு அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வார்னேவை அனகொண்டா பாம்பு தலையில் கடித்ததில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [illegible] "I'm A Celebrity...Get Me Out Of Here" என்ற அவுஸ்திரேலிய [illegible] கலந்து கொண்டார். அதில் எலி மற்றும் பாம்புகள் நிறைந்த பெட்டியில் தலையை விடவேண்டும் என்பது சவால். அதில், எலிகள் நிறைந்த பெட்டிக்குள் தலையை விட்ட ஷேன் வார்னே, அடுத்து பாம்புகள் நிறைந்த பெட்டிக்குள் தலையை விடுகிறார். இதில் ஒரு அனகொண்டா வகை பாம்பு அவரது தலையில் [illegible] கடித்துவிட்டது. இந்த வகை பாம்புகளுக்கு 100 பின்புற எதிர்கொள்ளும் பற்கள் ஊசி போன்று இருக்கும். இதில் காயமடைந்த வார்னே மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## தாய்மண்ணை முத்தமிட்டு நாடு திரும்பிய அகதிகள்



பின்லாந்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் விமானம் மூலம் தங்களது தாய்நாடான ஈராக்குக்கு திரும்பியுள்ளனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கடும் அகதிகள் பிரச்சினையை ஐரோப்பா சந்தித்து வருகிறது. உள்நாட்டுப்போர் மற்றும் வறுமை காரணமாக லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக ஐரோப்பாவுக்கு வந்த வண்ணம் உள்ளனர். பல்வேறு நாடுகளும் அவர்களுக்கு அடைக்கலம் அளித்து வருகிறது. இதேபோன்று பின்லாந்தும் ஏராளமான அகதிகளுக்கு வாழிடம் வழங்கி வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டு மட்டும் 32,500 அகதிகள் பின்லாந்தில் தஞ்சமடைந்துள்ளனர். இந்நிலையில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்களுக்கு புகலிடம் வழங்கக்கோரி விண்ணப்பித்த விண்ணப்பத்தை ரத்து செய்துள்ளனர்.

மேலும் பலர் பின்லாந்து அரசாங்கம் ஏற்பாடு செய்து தந்த விமானம் மூலம் தங்களின் தாய்நாடான ஈராக்குக்கு திரும்பியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் உணர்ச்சி மிகுதியால் விமான நிலையத்தின் தரையை முத்தமிட்டு தங்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினர். தங்களின் உறவினர்களுடன் இணைந்து வாழவேண்டும் என்பதால் தான் தாய் நாட்டுக்கு திரும்பியுள்ளதாக பலர் கூறியுள்ளனர். எனினும் பின்லாந்தின் உறையவைக்கும் குளிருக்கு ஏற்ப அவர்களால் வாழ முடியாததாலும் புகலிடம் வழங்குவதற்கு நீண்டகாலம் ஆகுவதாலும் தான் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பிரித்தானிய அரசுக்கு எதிராக 52,000 பேர் கையெழுத்து



பிரித்தானியா நாட்டில் உள்ள தென் ஆபிரிக்க நாட்டைச்சேர்ந்த 92 வயதான மூதாட்டியை உடனடியாக நாடு கடத்த உள்ள குடியமர்வு துறை அதிகாரிகளுக்கு எதிராக 52,000பேர் கையெழுத்து போராட்டத்தை நடத்தி வருகின்றனர். தென் ஆபிரிக்காவைப் பூர்வீகம் கொண்ட மேரி வில்ஸ்(66) என்ற பெண்மணி தன்னுடைய மகனுடன் இங்கிலாந்தில் உள்ள டோர்செட் நகரில் வசித்து வருகிறார். மேரி வில்ஸின் தாயாரான 92 வயதான Myrtle Cothill என்பவர் மகளை பார்ப்பதற்காக தென் ஆபிரிக்காவில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'பார்வையாளார் விசா' மூலம் இங்கிலாந்திற்குச் சென்றுள்ளார்.

தற்போது இவரது விசா காலம் முடிந்துவிட்டதால், அவரை உடனடியாக நாடு கடத்தத் தீர்மானித்து எதிர்வரும் செவ்வாய்கிழமை அன்று அவருக்கு விமானப் பயணச்சீட்டு பதியப்பட்டுள்ளது. ஆனால், தனது தாய்நாட்டிற்கு செல்ல மூதாட்டிக்கு விருப்பம் இல்லை எனத் தெரிகிறது. இதுமட்டுமல்லாமல், அவரது மகளும், பேரனும் தென் ஆபிரிக்காவிற்கு செல்ல உரிமை இல்லாததால் மூதாட்டியை மட்டுமே திருப்பி அனுப்ப அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.


## உயிரை பணயம் வைத்து பயணம் செய்யும் மாணவர்கள்



நேபாள் நாட்டில் பள்ளிக்கு செல்வதற்காக மிகுந்த ஆபத்தான முறையில் ஆற்றை கடக்கும் சிறுவர்களின் நிலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையில் அமைந்துள்ள மலை பிரதேசம் தான் நேபாளம். சுற்றுலாவுக்கு பெயர்பெற்ற இந்நாட்டில் கல்விக்காக உயிரை பணயம் வைத்து மாணவர்கள் பயணம் செய்வது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேபாளத்தின் பெனிகட் மாநிலத்தில் உள்ள திரிஷ்சுலி நதியின் அருகே அமைந்துள்ளது தயாங் கிராமம். சாலை வசதிகள் இல்லாத இந்த கிராமத்தை சேர்ந்த மக்கள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டுமென்றால் திரிஷ்சுலி நதியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இரும்பு கம்பியை பிடித்தபடிதான் செல்லவேண்டும். பெரியவர்கள் மட்டுமல்லாது ஏராளமான மாணவர்களும் தங்களின் கல்விக்காக இத்தகைய ஆபத்தான பயணத்தை தினமும் மேற்கொள்கின்றனர். நதியை கடப்பதற்காக இதைபோன்று பல்வேறு இடங்களிலும் இரும்பு கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒருசில இடங்களில் பெட்டிகளை தாங்கும் வசதியுடன் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 2010ஆம் ஆண்டு இவ்வாறு ஆபத்தான முறையில் நதியை கடக்க முயன்று 5 நபர்கள் இறந்துள்ளனர். இதைபோன்று ஏராளமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, காலால் நடந்து செல்லும் வகையில் மரப்பாலம் அமைத்து தரவேண்டும் என்று கிராம மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். சமீபத்தில், இதுபோன்ற ஆபத்தான பயணங்களை தவிர்ப்பதற்காக நதிகளின் குறுக்கே 366 பாலங்கள் அமைக்கப்படும் என்று அந்நாட்டு பிரதமர் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரை அத்திட்டம் நிறைவேற்றப்படாததால் தயாங்கிராம மக்கள் இந்த ஆபத்தான பயணங்களையே தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விமான நிறுவனத்தை நீதிமன்றத்திற்கு இழுத்த பெண்மணி



ஜேர்மனி நாட்டில் உள்ள சுமார் 44 சதவிகித பெண்களுக்கு விமானிகள் ஆகும் தகுதி இல்லை என வெளியாகியுள்ள தகவல்களை தொடர்ந்து பிரபல விமான நிறுவனத்தின் மீது பெண் ஒருவர் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆண், பெண் சம உரிமை பற்றிய விழிப்புணர்வு உலகம் முழுவதும் பரப்பப்பட்டாலும், இதனை முழுமையாக செயற்படுத்துகின்றனரா என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக் குறியாகவே உள்ளது. உதாரணத்திற்கு, ஜேர்மனியில் ஒரு விசித்திரமான வழக்கு நீதிமன்றத்திற்கு வந்துள்ளது. ஜேர்மனியின் பிரபல லூப்தான்சா விமான நிறுவனம், தனது விமானங்களில் விமானிகளாக பொறுப்பேற்பதற்கு ஆண்களை விட பெண்களுக்கு கூடுதல் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. குறிப்பாக, விமானிகளாக பொறுப்பேற்க உள்ளவர்கள் 165 முதல் 198 செ.மீ உயரம் இருந்தால் தான் அவர்கள் அப்பணிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக ஜேர்மனியில் 20 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் சுமார் 44 சதவிகித பெண்கள் 160 செ.மீ உயரத்திற்கு குறைவாக உள்ளனர். அதாவது, இவர்கள் விமானிகளாக பதவியேற்கும் தகுதி இல்லாதவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். பிற விமான நிறுவனங்களை ஒப்பிடுகையில், லூப்தான்சா நிறுவனம் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருவது ஏற்கனவே விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. விமானத்தில் உள்ள விமானிகள் அறையில் உள்ள அனைத்து சாதனங்களையும் இயக்க விமானிகளுக்கு போதுமான உயரம் இருக்கவேண்டும் என நிர்ப்பந்தம் விதித்துள்ளது. ஆனால், சுவிஸில் உள்ள இதே லூப்தான்சா கிளை நிறுவனம் விமானிகளின் உயரத்தை அதிகபட்சம் 160செ.மீ என்ற அளவிலேயே நிர்ணயம் செய்துள்ளது. ஏர் பெர்லின் விமான நிறுவனம் இதுபோன்ற எந்த கட்டுப்பாடுகளையும் நிர்ணயம் செய்யவில்லை. ஏனெனில், விமானிகளின் இருக்கைகளை உயரமாகவும், உயரம் குறைவாகவும் ஏற்றி இறக்க செய்ய முடியும் என்பதால், விமானிகளின் உயரம் அவ்வளவு அவசியம் இல்லை எனக் கூறியுள்ளது.

இவ்வாறு இருக்கையில், ஜேர்மனியைச் சேர்ந்த 162செ.மீ உயரம் உள்ள ஒரு பெண்ணை விமானியாகத் தெரிவுசெய்ய முடியாது என லூப்தான்சா மறுத்ததைத் தொடர்ந்து அந்த நிறுவனம் மீது அவர் வழக்கு தொடர்ந்துள்ளார். நீதிமன்ற விசாரணையில் உள்ள இந்த வழக்கில் தனக்கு நேர்ந்த அவமானத்திற்காக 15,000 யூரோ அபராதமும், கூடுதலாக இழப்பீடாக 1,20,000 யூரோவும் வழங்க உத்தரவிட வேண்டும் என கோரிக்கைவிடுத்துள்ளார். ஜேர்மன் வரலாற்றில் இது ஒரு விசித்திரமான வழக்கு என்பதால், பெண்மணிக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்படும் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளரை சீண்டிய போப்



மனிதர்களுக்கு இடையே சுவர்களை கட்டுபவர்கள் கிறிஸ்துவர்களாக இருக்கமுடியாது என்று தனது மெக்ஸிக்கோ பயணத்தின்போது போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். மெக்ஸிக்கோவுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள போப் பிரான்சிஸ் பல்வேறு மக்களை சந்தித்து ஆசி வழங்கினார். தனது பயணத்தின் கடைசி நாளன்று அமெரிக்க எல்லைக்கு அருகில் உள்ள ரியோ கிராண்டி அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசினார்.

இந்நிலையில் ரோம் நகருக்கு திரும்பி செல்வதற்கு முன்பாக பேசியபோது, மக்களுக்கு இடையில் பாலங்களை எழுப்புவதற்கு பதில், சுவர்களை எழுப்ப முயல்பவர்கள் கிறிஸ்துவர்களாக இருக்கமுடியாது. இத்தகைய செயல்கள் எந்த போதனையிலும் இல்லை என்று தெரிவித்தார். அமெரிக்க கத்தோலிக்கர்கள் டிரம்புக்கு ஓட்டு போடலாமா? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது, இந்த விவகாரத்தில் நான் தலையிட போவதில்லை. ஆனால் நான் சொல்வதேல்லாம் ஒன்றே ஒன்று தான். சுவர்களை எழுப்பவேண்டும் என்று அவர் கூறிக்கொண்டு திரிந்தால் அவர் கண்டிப்பாக கிறிஸ்துவரே இல்லை என்று தெரிவித்தார். அவரது கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் போப் பிரான்சிஸ் கருத்துக்கு பதில் கூறும் வகையில் டிரம்ப் பேசியுள்ளார்.

தென் கரோலினாவில் பிரச்சாரக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட டிரம்ப் பேசியதாவது, எந்த தலைவருக்கும், குறிப்பாக மத தலைவருக்கு அடுத்த மனிதர்களின் மதம் குறித்து பேச உரிமையில்லை. மெக்ஸிக்கோ அரசாங்கம் போப்பை எனக்கு எதிராகதூண்டியுள்ளது. நான் கிறிஸ்துவன் என்பதில் பெருமையடைகிறேன். ஒரு வேளை ஐ.எஸ் தீவிரவாதிகளின் முக்கிய குறியான வாடிகனில் தாக்குதல் நடந்தால் இதே போப் டிரம்ப் ஜனாதிபதியாக இருந்திருக்கலாம் என்று வேண்டுவார் என்று தெரிவித்துள்ளார். முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தான் வென்றால் அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோவுக்கு இடையில் சுவர் எழுப்புவேன் என்றும் அமெரிக்காவில் உள்ள அகதிகளை நாடு கடத்துவேன் என்றும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மனைவிக்காக வண்ணமயமான தோட்டம் அமைத்த கணவர்



ஜப்பான் நாட்டைச்சேர்ந்த முதியவர் ஒருவர் பார்வையில்லாத தனது மனைவிக்காக வண்ணமயமான பூந்தோட்டத்தை அமைத்துள்ளது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜப்பானின் Miyazaki Prefecture பகுதியை சேர்ந்தவர்கள் Toshiyuki Kuroki மற்றும் Yasuko தம்பதியினர். இவர்களுக்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்துள்ளது. திருமணமான சில நாட்களிலேயே Yasukoக்கு பார்வை தெரியாமல் போயுள்ளது. தங்களின் இறுதி நாட்களில் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா செல்லவேண்டும் என்று இத்தம்பதியினர் திட்டமிட்டிருந்தனர். ஆனால் Yasukoவுக்கு பார்வைபோனதால் ஏமாற்றமடைந்தனர். மேலும் Yasuko வெளியுலக தொடர்பு இல்லாமல் வாழத்தொடங்கினார். பார்வையில்லாததால் ஒருவித மன அழுத்தத்துடனே வாழ்ந்துவந்தார். மனைவியின் இந்நிலை கண்டு Toshiyuki Kuroki மிகவும் வருத்தமடைந்தார்.

இந்நிலையில், ஒருநாள் பூங்கா ஒன்றின் வழியாக செல்லும்போது அங்கு இளஞ்சிவப்பு நிறத்தில் பூத்திருந்த பூக்களை மக்கள் நின்று பார்த்துச்செல்வதைப் பார்த்துள்ளார். தனது நிலத்திலும் இப்பூக்களை வளர்த்தால் பார்ப்பதற்காக ஏராளமானோர் வருவர். அவர்களின் மூலம் தனது மனைவியின் தனிமை நிலைமாறும் என அவர் எண்ணினார். இதையடுத்து பத்து ஆண்டுகள் கடுமையாக உழைத்து மிகப்பெரிய பூந்தோட்டத்தை அமைத்தார். தற்போது இந்தத் தோட்டத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் பூத்துக்குலுங்கும் பூக்களைப் பார்ப்பதற்கு ஆண்டுக்கு 7ஆயிரம் பேர் வரை வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் Yasukoவுக்கு பேச்சு துணைக்கு ஆட்கள் வருவதால் அவரது முகத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக [illegible] பெருமையுடன் [illegible]

அடுத்த 100 ஆண்டுகளில் மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கும் என்று அறிவியல் ஆய்வாளர்கள் சுவாரசிய தகவல்களை வெளியிட்டுள்ளனர். நமது குடியிருப்புகளும், உணவும், தினசரி வாழ்க்கை முறையிலும் மாற்றம் ஏற்படும் என்றும், கடலுக்கடியில் குடியிருப்புகள் அமையலாம் என தெரிவித்துள்ள ஆய்வாளர்கள், வருங்காலங்களில் சனநெருக்கடியில் இருந்து தப்பிக்க இதுவே முறை எனவும் தெரிவித்துள்ளனர். பிரித்தானியாவின் லண்டன் போன்ற பெருநகரங்களில் உலக மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப சனத்தொகை அதிகரிக்கலாம், அதுபோன்ற காலகட்டங்களில் பொதுமக்கள் குடியிருப்பு சிக்கலாக மாறும் எனக் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## பிரான்ஸில் ரூ.14 கோடிக்கு ஏலம் போன சிலை



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல சிற்ப கலைஞர் ஆகஸ்ட் ரோடின் 1927ம் ஆண்டு ஆணும் பெண்ணும் முத்தமிடுவது போன்ற ஒரு சிலையை உருவாக்கி இருந்தார். இதற்கு தி கிஸ் என்று பெயரிடப்பட்டு இருந்தது.

இந்த சிலை உலகப்புகழ் பெற்றதாகவும் திகழ்ந்து வந்தது. 85செ.மீட்டர் உயரம் கொண்ட இந்த சிலையை பிரான்ஸ் நாட்டில் உள்ள நிறுவனம் ஒன்று ஏலத்துக்கு விட்டது. அதை அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் ரூ.14 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெலிகமவில் பறக்கும் படகுச் சேவை ஆரம்பம்

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் இலங்கையில் முதல் தடவையாக பிளையின் போர்ட் சுற்றுலா விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெலிகம கரையோர பகுதியில் அதி தொழில்நுட்பம் கொண்ட பெரா மோட்டார் விமான சேவை காலை 7.22க்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பிளையின் போர்ட் மற்றும் பெரா மோட்டார் முன்னோட்டம் நடைபெற்றதுடன். இதனை கண்டுகளிப்பதற்காக சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்திருந்தனர். சுற்றுலா சபை மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றின் அனுமதியுடன். விமானப் படையின் கண்காணிப்பின் கீழ் இந்தச்சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஸ்கை வோகர்ஸ் தனியார் நிறுவனம் இந்த சுற்றுலா ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் உள்நாட்டு. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வானில் பறந்தவாறு நாட்டின் அழகிய இடங்களைப் பார்வையிட சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.






## கரண்டிகளால் உருவாக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்


அமெரிக்காவைச் சேர்ந்த கலைஞர் ஜேம்ஸ் ரைஸ் அற்புதமான மோட்டார் சைக்கிள் சிற்பத்தை உருவாக்கியிருக்கிறார். இந்த மோட்டார் சைக்கிள் முழுவதும் கரண்டிகளை வைத்தே உருவாக்கியிருக்கிறார் என்பதுதான் சிறப்பு. கரண்டி மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றும் 2 லட்சம் முதல் 2.75 லட்சம் வரை விற்பனை செய்யப்படுகிறதாம்.



## ஆயிரக்கணக்கான பறவைகளின் அற்புதக்காட்சி

பறவைகளை விரும்பாதவர்களே இருக்க முடியாது. மனம் சோர்வாக இருக்கும் நேரங்களில் பறவையின் ரீங்காரங்களையும் அதன் அசைவுகளை பார்க்கும் போதே நமக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டுவிடும். ஒரு பறவைக்கே இப்படி என்றால் 80 ஆயிரம் பறவைகள் ஒன்று சேர்ந்தால் எப்படி இருக்கும். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் பணியாற்றும் போல் வில்லியம்ஸ் என்பவர் பறவைகளில் முணுமுணுத்தல்களையும், அதன் அசைவுகளையும் ப[illegible] செய்வதற்கு திட்டமிட்டிருந்தார். இதற்காக இணையத்தில் பல்வேறு இடங்களையும் தேடிய அவர் அவுஸ்திரேலியாவின் பாலைவனம் ஒன்றில் அமைந்துள்ள குளத்தை தேர்வு செய்துள்ளார். பின்னர் பலநாட்கள் அங்கு தங்கியிருந்து ஆயிரக்கணக்காக கிளிகளின் அசைவுகளை படம் பிடித்துள்ளார். நீலவானத்தை மறைக்கும் பச்சை வானம் போன்று கிளிகள் ஒன்றாக வானில் பறக்கும் புகைப்படங்கள் பிரமிப்பை ஏற்படுத்தியுள்ளன. அவரது இந்த மனதை மயக்கும் புகைப்படங்கள் இணையத்தில் வைரசாகப் பரவிவருகிறது.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 21.02.2016 அன்று வெளியிடப்பட்டது.